Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

ஒளி - 01 - கதிர் - 325 17.03.2001 சனிக்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/-

உங்களுக்கு தேவையான
உத்தரவாதமுள்ள
தங்க நகைகளுக்கு
சிறந்த இடம்
ஸ்ரீ உமையாள்
ஜீவல் ஹவுஸ்
மார்க்கட் றோட், பட்டிருப்பு -
களுவாஞ்சிக்குடி, Advt.




மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மகளிர்தின வைபவத்தில் கரஸதவ உதவ நிறுவன மதியுரைஞர் சாந்தி சச்சிதானந்தம், பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு ஆகியோர் உரை நிகழ்த்துவதையும், காந்தி சிலையருகிலிருந்து மண்டபம் நோக்கிச் சென்ற ஊர்வலத்தையும் இங்கு காணலாம். (படங்கள் காந்தன்)

## அதிகாரிகள் துரிதமாகச் செயற்படாவிட்டால்

# "நியாப்" திட்டத்துக்கான நிதியை உலக வங்கி இடைநிறுத்தலாம்

(நமது நிருபர்)

**வடக்குக் கிழக்கில் கடந்த பதினைந்து மாதங்களாக உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் "நியாப்" (வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாய திட்டம்) எதிர்பார்த்தளவு பயனளிக்கவில்லை எனவும், துரிதமாகவும் மக்களைச் சென்றடையக்கூடிய வகையிலும் திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், உலக வங்கி வழங்கவிருக்கும் நிதி உதவிகள் இரத்துச் செய்யப்படலாம் எனவும் 'நியாப்' திட்ட இலக்கு முகாமையாளர் நிஹால் பெர்னாண்டோ நேற்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் தெரிவித்தார்.**

கடந்த 15 மாதங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் "நியாப்" திட்டத்தின் தற்போதைய நிலை, எதிர்கால திட்டவரைவுகள் பற்றி



நிஹால் பெர்ணான்டோ | மரியானா

நேரில் கண்டறிவதற்காக, உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் திருமதி மரியான ரொறடோவா தலைமையிலான குழுவினர் மட்டக்களப்புக்கு வருகை தந்திருந்தமை வாசகர் அறிந்ததே.

இரு தினங்களாக நியாப் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். கிராமங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து மக்களுடன் கலந்துரையாடி விட்டு வந்த இக்குழுவினர் நேற்று மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் மோனகுருசாமி, நியாப் திட்டப் பணிப்பாளர் பி. இராமநாதன் மற்றும் பிரதேச செயலாளர்கள் கமநல சேவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஊடகவியலாளர் ஆகியோருடன் ஒரு சந்திப்பை மேற்கொண்டனர்.

### திருப்தியில்லை

இச்சந்திப்பின்போது உரை நிகழ்த்திய இலக்கு முகாமையாளர் நிஹால் பெர்ணாண்டோ கடந்த 15 வருடங்களாக வடக்குக் கிழக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட "நியாப்" திட்டத்தில் எமக்குப் பூரண திருப்தியில்லை. இது மிகவும் மந்த கதியில் நடக்கிறது. "நியாப்" திட்டம் தொடர்பாக மக்களுக்குப் பூரண விளக்கம் அளிக்கப்படவில்லை. அவர்கள் எம்மிடம் வீடுகளையும், ஏனைய உதவிகளையும் கோருகின்றனர் என்றார்.

இத்திட்டத்தை சிறப்பாக முன்னெடுக்க வேண்டுமாயின் நாம் துரிதமாகவும், மிக அவதானமாகவும் செயற்பட வேண்டும். திட்டச் செயற்பாடுகள் கவனமாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும். வழமையாக வருடத்தில் இருமுறை மேற்பார்வை செய்யப்பட்டது. இனிமேல் அதற்கிடையிலும் மீளாய்வுகள் செய்யப்படவேண்டும்.

### நிதி இரத்துச் செய்யப்படலாம்.

எதிர்வரும் ஜூலை மாதம் இலங்கைக்கான பணிப்பாளர் உலக

(8ம் பக்கம் பார்க்க)

## பொலிசாருக்கு புதிய அடையாள அட்டை!

(நமது நிருபர்)

பொலிசாருக்கு கணணி மயப்படுத்தப்பட்ட புதிய அடையாள அட்டைகளை வழங்க பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் மூலம் தற்போது பாவனையிலுள்ள பொலிசாரின் அடையாள அட்டைகளில் உள்ள விடயங்களைவிட மேலதிக விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வன்னியில் குண்டு வீச்சு! பொதுமகன் காயம்

(வவுனியா நிருபர்)

வன்னியில் நேற்று மிக்ரக விமானங்கள் மக்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலின்போது புதுக்குடியிருப்பு கோம்பாவில்லைச் சேர்ந்த யோகராசா உதயகுமார் (22) என்னும் நபர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டு
வேலை வாய்ப்பு
ஆண்களுக்கு:-
- ஓட்டோ மெக்கானிக்
- ஓட்டோ எலக்ரீஷியன்
- ஓட்டோ பெயின்ரர்
- ஓட்டோ ரிங்கர்
- பாமர்
- பிளம்பர்

வேலைவாய்ப்புக்கள்...
தங்குமிடம், மருத்துவம்
இலவசம்
மிக விரைவான பயணங்களுக்கு
நாடுங்கள்
நியூபாஹிம் என்டர் பிரைஸஸ்
LL No 736
283/1, மெயின் வீதி,
புறக்கோட்டை
மட்டக்களப்பில்
தொடர்புக்கு!
151/1, 151/2 பிரதானவீதி
காத்தான்குடி-02
தொ.பே:065-47090, ADVT

## மடுமாதா புத்தளத்தை அடைந்தது!

(நமது நிருபர்)

அமைதி, சமாதானம் வேண்டி மடுமாதா திருச்சொரூப பவனி நேற்றுப் பிற்பகல் புத்தளத்தை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம் அடைக்கலமாதா தேவாலயத்தில் விசேட பூசை தியானங்கள் இடம்பெற்ற பின்னர், தேவமாதா சிலாபம் நோக்கிப் புறப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 14ம் திகதி மடுமாதா திருப்பவனி ஆரம்பிக்கப்பட்டு தென்னிலங்கை நோக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் தடுப்புக்காவலில் இருந்த நான்கு விவசாயிகள் விடுதலை!

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகள் தங்களது. பாதுகாப்பில் இருந்த நான்கு சிங்கள விவசாயிகளை விடுதலை செய்துள்ளனர்.

இந்த நால்வரையும் வியாழக்கிழமை வன்னியிலுள்ள மல்லாவியில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகளிடம் கையளித்ததாக தெரியவருகிறது.

ஓயாத அலைகள் 3 நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் மணலாறுப் பிரதேசம் வந்ததைத் தொடர்ந்து வீடுகளை விட்டு வெளியேறிய சிங்கள விவசாயிகள் மீண்டும் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற போது 99ம் ஆண்டு டிசம்பர் மாதம் விடுதலைப் புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

பதவியா பராக்கிரமபுரத்தைச்சேர்ந்த பி.ஜெயரெட்ண(31), என்.பி.சிறிவர்த்தன(41), கே.எம். சுதர்சன(26), என்.பி.மாறசிங்க(40) ஆகிய நால்வருமே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது இவர்கள் உறவினர்களிடம் ஒப்படைப்பதற்காக நேற்று வவுனியா கொண்டு வரப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

### எரிக்கணை திராவகம்

**பௌத்த தர்மத்தின்படி நடந்தால் சமூகத்தை அழிவிலிருந்த மீட்கலாம்**

*- பிரதமர் ரட்ணசிறி*



துண்டுபோட்டு, ஷெல்லடித்து எங்கள அழிப்பது எந்த (அ) தர்மத்தின்படி எண்டு சொல்லுங்க மச்சான்......

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055

E-mail :- tkathir@snet.lk


## நியாப் நிலைக்குமா?

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நீர்ப்பாசன மற்றும் விவசாய அபிவிருத்தியினூடாக கிராமங்களை அபிவிருத்தி செய்யும் உலக வங்கியின் நியாப் திட்டம் பற்றி நேரடியாக ஆய்வு செய்வதற்கு திட்டத்துடன் சம்பந்தப்பட்ட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மட்டக்களப்புக்கு வந்து போயுள்ளனர்.

கடந்த பதினைந்து மாதங்களாக வடக்குக் கிழக்குப் பகுதியில் மாகாண சபையின் கீழ் முதல்த்தடவையாக மேற்கொள்ளப்பட்ட நியாப் திட்டங்களின் விளைவுகள் மற்றும் பலாபலன்களை மதிப்பீடு செய்வதற்காகவே இவர்கள் இங்கு வந்திருந்தனர்.

உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் தலைமையில் வந்த இக்குழுவினர், வந்ததுதான் வந்தோம். நமக்கென்ன. இரண்டுநாள் இங்கு தங்கி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து விருந்துண்டுவிட்டுப் போவோம் என்றிராமல்,மட்டக்களப்பில், ௨000ம் ஆண்டு நியாப் திட்டம் அமுல்படுத்தப்பட்ட கிராமங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளைக் கண்டறிய முயன்றுள்ளனர்.

நியாப் திட்டம் அமுல்படுத்தப்படும் கிராமங்கள் சில அரச படைக்கட்டுப்பாட்டுக்கு வெளியே இருக்கின்றபோதும், அவர்கள் அந்த இடங்களுக்கெல்லாம் நேரடியாக விஜயம் செய்து நிலைமையை கண்டறிந்து மீண்டுள்ளனர்.

படைக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வெளியே உத்தியோக பூர்வமாகச் செல்வதற்கு அரச அதிபருக்கு படையினரின் அனுமதி இல்லாத நிலையிலும், நியாப் பிரதிநிதி கள் தமது குழுவில் அவரையும் சேர்த்து படைக்கட்டுப்பாட்டுக்கு வெளியே அவரை அழைத்துச் சென்றுமுள்ளனர்.

அவர்களது இந்த நேரடி விஜயங்களின்போது அவர்கள் அதிகாரிகளுடனன்றி, பொதுமக்களுடனேயே அதிகம் கலந்துரையாடி நிலைமைகளை அறிந்து கொள்ள முயன்றதாகவும் தெரிய வருகிறது.

நியாப் திட்டத்தின் தற்போதைய நிலை பற்றி அதிகாரிகள் விளக்கமளிக்க முயன்ற போதும் உலக வங்கிக் குழுவினர் அதை மறுத்து பொதுமக்களிடமிருந்தே கருத்துக்களை' அறிய முயன்றனராம். இது வரவேற்கத்தக்க ஒரு முன்னுதாரணம்.

இவ்வாறு நிலைமைகளை நேரடியாக கண்டறிந்த இக்குழுவினர், நேற்றைய தினம் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் பணிமணையில் அரச அதிபர், பணிமனையில் அரச அதிபர், பிரதேச செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள்,ஊடகவியலாளர்களுடன் நடாத்திய சந்திப்பில், நியாப் திட்டத்தின் தற்போதைய நிலை தொடர்பில் தாம் திருப்திகரமாக இல்லை என்பதைத் தெரிவித்திருக்கின்றனர்.

இது தொடர்பில், மழை, வெள்ளம், சூறாவளி, நீண்டதூரப் பயணம் போன்ற பல்வேறு காரணங்கள் அதிகாரிகள் சிலரால் தெரிவிக்கப் பட்டபோதும் நியாப் குழுவினர் போதிய திருப்தியடைந்ததாகத் தெரியவில்லை.

எவ்வாறெனினும் நியாப் திட்டம் சிறப்பாகவும் துரிதமாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் அவர்கள் கூடிய அக்கறையுடனிருப்பதாகத் தெரிய வருகிறது. வரும்ஜூலை மாதம் உலக வங்கி பொறுப்பதிகாரிகளை நேரடியாகச் சந்திக்கவுள்ள இலங்கைக்கான பணிப்பாளர், அச்சந்திப்பின் போது திட்டத்தின் தற்போதைய நிலை, எதிர்கால திட்ட முன் வரைவுகளை விளக்க வேண்டியிருக்கும். இதில் உலக வங்கி திருப்தியடையாவிட்டால், நிதி வழங்கல் நிறுத்தப்படவும் வாய்ப்புண்டு.

இது உலகவங்கியின் திட்டமல்ல. உங்களின் திட்டம் நீங்களே இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என விளக்கினார் திட்டப் பணிப்பாளர் நிஹால் பெர்ணான்டோ.

எனவே, எமது அதிகாரிகள் அடுத்துவரும் இரண்டு மாத காலத்துக்குத் துரிதமாக வேலை செய்து சரியான திட்டமுன் வரைபுகளைச் செய்தாலே இந்த நியாப் திட்ட வாய்ப்பு எமது மக்களுக்குக் கிட்டும்.

இது விடயத்தில் உலக வங்கி அதிகாரிகள் போதிய ஆலோசனைகளையும். வழிமுறைகளையும் விளக்கிச் சென்றுள்ளனர்.

உயர் அதிகார மட்ட விடயங்களிலும். நிர்வாகச் செலவீனங்களிலும் கூடுதல் கவனம் செலுத்தாது. மக்கள் மட்டத்தில் அவர்களது பார்வை, தேவை, நோக்கு என்பவற்றை அறிந்து திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும் என அவர்கள் விளக்கினார்.

பொருத்தமான ஆலோசனை. இன்றைய அரச, அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பலரும் கூட உன்னிப்பாகக் கவனித்து பின்பற்ற வேண்டிய வழிமுறை.

பின்பற்றினால், எமது பிரதேசங்கள் அபிவிருத்தியடையும். வளம் பெறும்.

நமது அதிகாரிகள் செய்வார்கள் என நம்புவோம்.

---

*(புதன்கிழமை தொடர்ச்சி......)*

சிங்களத்தை அரச கரும மொழியாக்கி அவர்கள் படும் துன்பத்தை என்னால் உணர முடிகின்றது. இதற்கு அவர்கள் கொடுக்கும் விலை மிகப்பெரியது. பாடநூல்கள் நிர்வாக விதிமுறைகள், கோப்புக்கள் போன்றவற்றை ஆங்கிலத்தில் இருந்து சிங்களம், தமிழ் ஆகியவற்றிற்கு மொழிமாற்றம் செய்கிறார்கள். இதற்கு அவர்கள் செலவிடும் நேரமும், பணமும் வீண் விரயமாக்கப்படுகின்றது. பல்கலைக்கழகங்களில் மும்மொழிகளிலும் பாடம் நடத்துகிறார்கள்.

என்று தான் அழைக்கப்படுகின்றது.

சொலமன்வெஸ்ற் றிஜ்வே பண்டாரநாயக்காவைப் போல் ஜெயவர்த்தனாவும் கிறிஸ்த வராகப் பிறந்து புத்த மதத்திற்கு மாறியவர். பண்டாரநாயக்காவைப் போன்று இவரும் மக்கள் தலைமையைப் பெறுவதற்காக சுதேசி வேடம் தரித்தவர். தனது எழுபது வரட வாழ்வில் பல அரசியல் ஏற்றத் தாழ்வுகளைச் சந்தித்தவர். பார்க்கப்போனால் தாழ்வுகள் தான் கூடியவை தோல்விகளுக்கு விளக்கம் கற்பிப்பது போல் இவர் தத்துவம் பேசுவார்.

சிறிலங்கா கடைப்பிடித்த சோசலிசத்தை கைவிடவும் புதிய பாதையைத் திறக்கவும் அவர் விருப்பங் காட்டினார். சோசலிசம் நாட்

வேண்டும். சிறில்ங்காவின் மேம்பாடு விமானசேவையைத் தொடங்குவதால் கிடைக்கப்போவதில்லை. இதையெல்லாம் அவர் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை.

சிறிலங்கா விமானசேவையைத் தொடங்குவதற்கு வேண்டிய உதவிகளை நாம் வழங்கினோம். இருமாதம் தொடக்கம் இருவருடம் வரையிலான சேவை காலத்திற்கு நாம் எண்பது சிங்கப்பூர் விமான சேவைப் பணியாளர்களை கொடுத்துதவினோம். உலகளாவிய எமது விற்பனை முகவர்கள் சிறிலங்காவுக்கு உதவினார்கள். வெளிநாடுகளில் அலுவலகங்கள் திறப்பதற்கும் நாம் உதவினோம். பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கும் பயிற்சி பயிற்சி நிலையங்களைத் திறப்பதற்கும் நம்மால் இயன்றளவு செய்தோம்.

அதியுயர் மட்டத்தில்

# சனநாயகம்

# தமிழர் பிரச்சினையைத் தீர்க்கத் தவறியது

சிங்களவர்களுக்குச் சிங்களம், தமிழர்களுக்குத் தமிழ், பறஙகியர்களுக்கு ஆங்கிலம், பேரதெனியா பல்லைக்கழக உபவேந்தரை நான் இப்படிக் கேட்டேன்; மும்மொழியில் பயிற்றப்பட்ட பெருந்தெருப் பொறியியலாளர்கள் இணைந்து எப்படி ஒரு மேம் பாலத்தை கட்டி முடித்திருப்பார்கள்? அந்த உபவேந்தர் ஒரு பறங்கி இனத்தவர் தான் கேம்பிறிஜ் பல்கலைக்கழக்கழகம் சென்று கலாநிதிப்பட்டம் பெற்றதற்கு அத்தாட்சியாகக் கழுத்துப்பட்டி (TIE) அணிந்திருந்தார்.

"ஐயா, நீங்கள் கேட்டது ஒரு அரசியல் கேள்வி. அதற்கு அமைச்சர்கள் தான் பதில் கூற வேண்டும்." என்று அவர் எனக்குப் பதிலளித்தார். நான் பாடப் புத்தகங்கள் பற்றியும் கேட்டேன். ஆங்கிலப் பாடநூல்கள் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் பிரசுரமாகும் போது காலதாமதமாகி விடும். இதனால் தமிழ் சிங்களப் பாடநூல்களில் பல குறைபாடுகள் தோன்றும். ஆங்கில நூல்கள் புதிதாகத் தோன்றும் வேகத்திற்கு ஈடாக மொழிமாற்ற நூல்கள் தோன்றும் வாய்ப்புக்கள் இல்லை. இதனால் கல்வி திருப்திகரமாக அமையா. இவ்வாறு கூறிய எ...னைஅவர் மறுத்துரைக்கவில்லை.

தேயிலைத் தோட்டங்களும் படுமோசமான நிலையில் இருந்தன. பிரிட்டிசார் மேற்பார்வை செய்வதற்கும், உள்ளூர் வாசிகள் மேற்பார்வை செய்வதற்கும் இடையில் நிறைய வித்தியாசம் உள்ளூர் மேற்பார்வையாளர்கள் திறமை போதாதவர்கள் . இறுக்கமான மேற்பார்வையும் கட்டுப்பாடும் இல்லாத குறையால் முற்றிய இலைகளும் பறிக்கப்படுகின்றன. இதனால் சிலோன் தேயிலைகள் தரம் கெடுகின்றது.

அவர்களுடைய தென்னந் தோட்டங்களுக்கும் இதே கதி ஏற்பட்டுள்ளது. நிர்வாகஞ் செய்து பழக விலை கொடுக்க வேண்டும். கொடுக்கும் விலை பயன் தர வேண்டும். வீண்விரயமாக அமையும் போது நிர்வாகம் பாழ்படும்.

நான் பல வருடங்களாக சிலோன் வரும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இப்போது சிறிலங்கா என்று அழைக்கப்படும் இந்த நாட்டின் புதிய பிரதமரை சிட்னி நகரில் நடைபெற்ற பிரிட்டிஸ் பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் சந்தித்தேன். புதிய பிரதமரின் பெயர், ஜூனியஸ் றிச்சர்ட் ஜெயவர்த்தனா. அவருக்கு முந்திய பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா; நாட்டின் பெயர் மாற்றத்தைச் செய்ததோடு நாட்டை குடியரசாகவும் மாற்றியிருந்தார். இதனால் ஏதேனும் நன்மை கிடைத்ததாக எனக்குத் தெரியவில்லை. இப்போதும் இந்த நாட்டின் தேயிலைச் 'சிலோன் தேயிலை'

டைக் குட்டிச்சுவராக்கி விட்டது என்பது அவருடைய கருத்து. என்னை சிட்னியில் சந்தித்தபின் சிங்கப்பூரில் என்னை வந்து சந்தித்தார். சிறிலங்காவின் மேம்பாட்டிற்கு சிங்கப்பூரின் ஒத்துழைப்பை என்னிடம் அவர் வேண்டினார்.

அவருடைய யோசனைகளின் அனுகூலத்தை நான் மெச்சினேன். இதன் காரணமாக ஏப்பிரல் 1978 'இல் நான் சிறிலங்காவிற்கு ஒரு விஜயம் மேற்கொண்டேன். யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு தன்னாட்சி (AUTONOMY) வழங்கப் போவதாக அவர் எனக்குச் சொன்னார். சிங்களவர்களின் மேலாதிக்கத்தை அவர் தமிழர்களுக்கு விட்டுக் கொடுக்கப்போவதில்லை என்பதை அப்போது நான் உணரவில்லை. இதுதான் 1983 ஆம் ஆண்டு தொடங்கிய உள்நாட்டுப் போருக்கு முக்கிய காரணம். பல வருடங்களுக்கு அல்லது பல தலைமுறைகளுக்கு சிறிலங்காவின் செழிப்பை அது தள்ளிப்போட்டது.

அவருக்குச் சில பலவீனங்கள் இருந்தன. அவர் ஒரு பயணிகள் விமான சேவையை சிறிலங்காவில் ஆரம்பிக்க ஆசைப்பட்டார். ஒரு நாட்டின் 'முன்னேற்றத்திற்கு அந்த நாட்டின் பயணிகள் விமான சேவை அடையாளமாக அமையும் என்பது அவருடைய எண்ணம். அண்மையில் வெளிவந்த பேர்ச்சூன் (FORTUNE) சஞ்சிகை இதழின்படி உலகின் தலைசிறந்த விமான சேவை என்ற சிறப்பு விருதை சிங்கப்பூர் விமானசேவை பெறுகின்றது.

சிங்கப்பூர் விமானசேவையில் ஒரு சிறிலங்கா தமிழர், கப்டன் தர விமான ஓட்டியாகப் பதவி வகித்தார். இவரைத் தன்க்குத் தந்துதவுமாறு ஜெயவர்த்தனா வேண்டினார். நான் அதற்கு ஒத்துக் கொண்டேன். ஆனால் விமான ஓட்டியால் எப்படி ஒரு விமான சேவையை உருவாக்கி நடத்த முடியும் ? எனினும் சிறிலங்காவிற்கு உதவ நாம் தயாரானோம். விமானசேவ்வையைத் தொடங்கி நடத்துவதுதான் சிறிலங்காவின் முக்கிய மேம்பாட்டுத் திட்டமாக எண்ணக்கூடாது என்று நான் அவருக்கு வலியுறுத்தினேன்.

விமானசேவைக்கு ஒதுக்கப்படும் நிதியை விவசாயம், நீர்ப்பாசனம், வீடமைப்பு, தொழிற்பெருக்கம் இத்தியாதிகளுக்கு நல்ல எதிர்பார்ப்புக்களோடு செலவிடலாம் என்று நான் அவருக்குச் சொன்னேன். விமானசேவை ஒரு கவர்ச்சியான திட்டம். அதனுடைய வருவாய் நிட்சயம் இல்லை. நிர்வாகத்தில் மிகவும் கவனமாக இருத்தல்

நிர்வாகக்கட்டமைப்பு சரியாக அமையவில்லை. நான் கொடுத்த விமானமோட்டி இப்போது சிறிலங்கா விமானசேவையின் தலைவராகி விட்டார். எமது ஆலோசனைக்கு முரணாக அவர் இரு பழைய விமானங்களை வாங்குவதற்கு தீர்மானித்தார். அத்தோடு நாங்கள் வெளியேறத் தீர்மானித்தோம். திடீர் விரிவாக்கம், வருவாய் வறட்சி, நன்கு பயிற்றப்பட்ட பணியாளர் தட்டுப்பாடு, நம்பிக்கையற்ற பறப்புநேர அட்டவணை,, பயணிகள் ஆதரவின்மை என்ற ஐந்து காரணங்களுக்காக சிறிலங்கா விமான சேவை தோல்வியைச் சந்தித்தது.

சிங்கப்பூரைப் போன்ற நாடாக வேண்டும் என்ற குறிக்கோளுடன் அந்த நேரகாலத்தில் **சிறிலங்கா** திட்டமிட்டது. இது எமக்குப் **பெருமையைத் தந்தது. சிங்கப்பூரின் வீட்டுத்திட்டம்** போன்ற தொன்றை (1982) இல் ஆரம்பித்தார்கள். ஆனால் அதற்கு நிதி ஒதுக்கீடு போதாது. சிங்கப்பூர் நிலப்பரப்பிலும் பார்க்க சற்றுச் சிறிய பிரதேசத்தில் ஒரு சுதந்திர வர்த்தக வலயத்தைத் திறந்தார்கள். தமிழ் புலிகளின் நடவடிக்கைகளால் முதலீட்டாளர்கள் விரட்டப்பட்டனர். அதன் காரணமாக சுதந்திர வர்த்தக வலயம் மேலெழும்ப மறுத்தது.

காணிப் பங்கீட்டில்தான் ஜெயவர்த்தனா தனது மிகப் பெரிய தவறை விட்டார். சிறிலங்காவின் வறண்ட பிரதேசங்களில் வெளிநாட்டு உதவியுடன் அவர் காணி நிலங்களை மீட்டெடுத்தார். பழைய நீர்ப்பாசனத் திட்டங்களை புதுப்பித்தார். மழைநாட்டிலிருந்து வரும் நதி நீரைச் சேமிக்கும் குளங்களை திருத்தினார். ஆனால் இப்பிரதேசத்தில் நெடுநாட்களாக வாழ்ந்த தமிழர்களை ஓரங்கட்டியபடி சிங்கள இனத்தவர்களுக்கு மாத்திரம் மீட்டெடுத்த நிலத்தை பங்கிட்டு வழங்கினார்.

பாரம்பரிய நிலத்தை இழந்த தமிழர்கள் தமது முழு ஆதரவை தமிழ் புலிகளுக்கு வழங்கினர். ஜெயவர்த்தனாவின் அந்தரங்கச் செயலாளரான ஒரு யாழ்ப்பாணத் தமிழரை ஒருமுறை சந்தித்தேன். காணிப் பங்கீடு மிகவும் பாரதூரமான தவறு என்று ஜெயவர்த்தனாவுக்கு விசுவாசமான இந்த மனிதர் எனக்கு கூறினார். தொடர்ந்து நடைபெறும் போரில் 50.000 வரையிலானோர் கொல்லப்பட்டுள்ளனர். பதினைந்து வருடம் சென்றபின்பும் போர் ஓய்வதாகத் தெரியவில்லை.

மிகவும் களைத்துப்போன நிலைய்யில் ஜெயவர்த்தனா 1988இல்

*(5ம் பக்கம் பார்க்க)*

# கொட்டில் பாடசாலைகளுக்குக் கட்டிடம் வடகிழக்கு மாகாண சபையே பொறுப்பு

**–100 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது என்கிறார் கல்வியமைச்சர்–**

மட்டக்களப்பில் தற்காலிகமாக கொட்டில்களில் இயங்கும் பாடசாலைகளின் எண்ணிக்கையையும், அதற்கான நிரந்தரக் கட்டிட அமைப்புப் பற்றியும், வினாத்தொடுத்தார் மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா.

வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது கேட்கப்பட்ட மேற்படி கேள்விக்குப் பதிலளித்துப் பேசிய கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜயந் கூறியதாவது:-

இவை பற்றிய சரியான புள்ளி விபரங்கள் வடக்கு கிழக்கு மாகாண சபையிடமிருந்து பெறப்பட வேண்டும். வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளின் கல்வி அபிவிருத்திக்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அதில் கூடிய தொகை கொட்டில் பாடசாலைகளின் புனரமைப்பிற்கு செலவிடப்படவுள்ளது.

அதில் கூடுதலான நிதி அலிசாஹிர் மௌலானா குறிப்பிடும் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்படும்.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 31ம் திகதி வரை ஆசிரியர்களின் சேவைத் தரங்கள் தொடர்பான விபரங்கள் மாகாணக் கல்வியமைச்சிலிருந்து பெறப்படும். இதனை விரைவுபடுத்த சம்பந்தப்பட்ட மேலதிகக் கல்விப் பணிப்பாளர்களை சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு ஏற்கனவே நியமனம் செய்துள்ளோம் எனப் பதிலளித்தார் பிரேம் ஜயந்த்.

# அங்கீகாரம் இன்றி வருட கணக்கில் பணியாற்றும் ஊழியர்கள்

(கல்லாறு நிருபர்)

"ஆளணி அங்கீகாரம் இன்றி பல கூட்டுறவு ஊழியர்கள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் வருடக்கணக்காக பணியாற்றி வருகின்றார்கள். இது பொதுச் சட்ட திட்டங்களுக்கும், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கும் முற்றிலும் முரணானதாகும். அத்துடன் இயக்குனர் சபைக்கும் ஊழியர்களுக்குமிடையே புரிந்துணர்வு, ஒத்துழைப்பு முக்கிய கொள்வனவுகளிலும் குறைபாடுகள் காணப்படுகின்றன. இந்தக் குறைபாடுகள் அனைத்தும் உடனடியாக நோக்கப்பட வேண்டும்.. இன்றேல் ப.நோ.கூ.சங்கங்களில் அதிகார துஸ்பிரயோகம் மலிந்துவிடும்.

அவ்வாறான இயக்குனர் சபைக்கெதிரான கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் 46/1 என்ற விசாரணை தவிர்க்க முடியாததாகிவிடும். இவ்விசாரணை மூலம் சம்பந்தப்பட்ட இயக்குனர்சபை உறுப்பினர்கள் சங்கக் கூட்டத்திற்கு பொறுப்பேற்க வேண்டி வரலாம். அந் நட்டத்தை தனித்தும் ஒருமித்தும் தங்களது சொந்த சொத்துக்களில் ஈடு செய்ய வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

எனவே புதிதாக இம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள இயக்குனர் சபை உறுப்பினர்கள் கூட்டுறவுக் கொள்கைகளுக்கு மதிப்பளித்து பொதுமக்களுக்காகவே கூட்டுறவுச் சங்கங்கள் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்".

மேற்கண்டவாறு மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற கணக்காய்வு கூ.அ.உ. ஆணையாளர் வி.பேரின்பம் கூறினார்.

## போசாக்குணவு வழங்கல்

(எழுவான்)

களுவாஞ்சிகுடி நகர லயன்ஸ் கழகம் அண்மையில் களுவாஞ்சிகுடி மாணவர் அபிவிருத்திக் கழகம் நடாத்தும் இலவச வகுப்புக்களில் பங்கு கொண்ட மாணவர்களுக்கு சத்துணவுப் பொருட்களை வழங்கி மாணவர்களை ஊக்கப்படுத்தியது. இதற்கு சில வாரங்களுக்கு முன்னர், அப்பியாசக் கொப்பிகள், பென்சில், பென், அரிக்கன்லாம்பு போன்ற பொருட்களை களுவாஞ்சிகுடி நகர லயன்ஸ் கழகம் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.



**களுவாஞ்சிகுடி சமூக நலன்புரி அமைப்பால் வசதி குறைந்த மாணவர்களுக்கு நடாத்தப்படும் பாலர் பாடசாலையில் மாணவர்கள்**

## ஆய்வுகூட நிர்மாணிப்புக்கு 20 இலட்சம் ஒதுக்கீடு

(களுவாஞ்சிகுடி நிருபர்)

களுவாஞ்சிகுடி மகா வித்தியாலயத்தின் ஆய்வுகூட நிர்மாணிப்புக்கு 20 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக, முன்னாள் கட்டிடத்திணைக்கள சிரேஸ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தரும், கல்வித் திணைக்கள, பட்டிருப்பு வலய வேலைப் பரிசோதகர் நடராஜா தெரிவித்தார்.

**'தினக்கதிர்' ஓராண்டு நிறைவையொட்டி வாசகர்களுக்கான போட்டிகள்**

1. **சிறுகதைப் போட்டி :-** சமூக மேம்பாட்டை கருப்பொருளாகக் கொண்டு 1500 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
2. **கவிதைப் போட்டி :-** 50 வரிகளுக்கு மேற்படலாகாது

**நிபந்தனைகள்:–**

**✱ தினக்கதிர் நிறுவனத்தில் கடமை புரிபவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் இப்போட்டிகளில் பங்குபற்ற முடியாது.**

**'✱ தினக்கதிர்' வாசக நெஞ்சங்கள் அனைவரும் வயது வித்தியாசங்கள் இன்றி இப்போட்டியில் பங்கு பற்றலாம்.**

பெறுமதியான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

*30.03.2001 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்க கூடியவாறு

"ஓராண்டு நிறைவு வாசகர் போட்டி"

'தினக்கதிர்'

த.பெ.இல:06

மட்டக்களப்பு

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

வெற்றியீட்டிய வாசகர்களின் விபரம் தினக்கதிரில் பிரசுரிக்கப்படும்.

வெற்றியீட்டிய சிறுகதை/ கவிதை தினக்கதிரில் பிரசுரிக்கப்படும்.

வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் தினக்கதிர் ஆண்டு விழாவில் வழங்கப்படும்.


சிறு விளம்பரம்

**காணவில்லை**

காத்தான்குடி -06, 61/14 மீராபள்ளி வீதியைச் சேர்ந்த முகம்மது மீராசாகிபு அன்ஷாவின் அடையாள அட்டை, வீட்டுச் சாவி அடங்கிய பை காணாமல் போய் விட்டது. கண்டெடுத்தவர்கள் அதனை மட்டக்களப்பு 37, முனை வீதி, அல்ராஜ டெக்ஸ் ஆடையகத்தில் ஒப்படைக்கவும்.

Advt.


# செய்திச்சுருக்கம்

## புலித்தடைக்கு பிரிட்டிஷ் பாராளுமன்றம் அங்கீகாரம்

பயங்கரவாத இயக்கங்களின் தடையை அங்கீகரிக்கக் கோரி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் உள்நாட்டு விவகார அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை பாராளுமன்றம் பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரித்தது.

இந்த பிரேரணையை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட பொழுது 396 எம்.பிக்கள் தடைசெய்யப்படுவதை ஆதரித்து வாக்களித்தனர். 17 பேர் எதிர்த்து வாக்களித்தனர்.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விடுதலைப்புலிகள் உட்பட 21 பிறநாட்டு இயக்கங்களை பிரிட்டிஷ் உள்விவகார அமைச்சர் இனங்கண்டு பிரிட்டனில் இவை இயங்க முடியாதவாறு தடை விதிக்கப்பட வேண்டுமென்று அறிவித்திருந்தார். இதற்கான அங்கீகாரத்தை கோரும் பிரேரணையையே பாராளுமன்றம் பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரித்துள்ளது.

## பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்ட மாணவன் தூக்கிட்டுத் தற்கொலை

பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்ட தொழில் நுட்ப பிரிவு மாணவன் ஒருவன் மனவேதனையால் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவமொன்று தம்புள்ள பகுதியில் கடந்த 13ம் திகதி இடம் பெற்றுள்ளது.

தம்புள்ள கவட்யான கிராமத்தைச் சேர்ந்த சரீர சதுரங்க(வயது 9) என்ற மாணவனே இவ்வாறு தற்கொலை செய்த கொண்டவராவார்.

தம்புள்ள இனா மறுவ அவிஸ் தொழில் நுட்ப கல்லூரிக்கு தெரிவாகிய இம்மாணவன் பகிடிவதை என்ற பெயரில் நிர்வாணமாக்கப்பட்டு மோசமாக மிருகத்தனமான வகையில் சித்திரவதைகளுக்கு இலக் காக்கப்பட்டுள்ளார்.

இவ்வதையால் பாதிக்கப்பட்டு மனம் தளர்ந்த நிலையிலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இம்மாணவன் இரண்டு தினங்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபின் வீடு திரும்பியுள்ளார்.

மனம் பாதிப்படைந்த நிலையில் வீட்டில் அதிகாலை வேளையில் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிப்பதுடன் தொடர்ந்து இச்சம்பவம் குறித்து விசாரணைகளும் மேற்கொண்டு வருகின்றனர்.

## முச்சக்கர வண்டி சாரதி கழுத்து வெட்டி கொலை!

எல்பிட்டிய பிரதேச முச்சக்கரவண்டிச் சாரதியொருவர் இனந்தெரியாதோரால் கழுத்து வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் காலி அம்பலாங்கொடை ஹகந்த எனும் இடத்தில் இடம் பெற்றுள்ளது.

படுகொலை செய்யப்பட்டவர் காலி மாவட்ட எல்பிட்டிய எனும் இடத்தில் வசிக்கும் எச்.எம்.குணசேன(35வயது) என்பவராவார்.

இவர் சம்பவம் நடைபெற்ற தினதன்று இரவு எல்பிட்டிய நகரத்தில் தனது முச்சக்கர வண்டியை வாடகைக்கான வாகனங்கள் தரிப்பு நிலையத்தில் நிறுத்திக் கொண்டிருக்கையில் அங்கு திடீரென வந்த மூன்று இளைஞர்கள் அம்பலாங்கொடை பிரதேசத்திற்கு செல்ல வேண்டும் என்று கூட்டிச் சென்றுள்ளனர்.

பின்னர் அவர் அம்பலாங்கொடை தழக்க ஹந்தை எனும் இடத்தில் வைத்து கழுத்து வெட்டப்பட்ட நிலையில் ஆட்டோ வண்டியினுள்ளே இறந்து கிடக்க காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகள் அம்பலாங்கொடைப் பொலிஸாரால் மேற்கொள்ளப்படுகின்றன என பொலிஸார் தெரிவித்தனர்.

## கைக்குண்டு தவறுதலாக வெடித்து மாணவன் பலி

உடுப்பு அலுமாரிக்குள் இருந்த கைக்குண்டொன்று தவறுதலாக வெடித்ததால் பாடசாலை மாணவன் ஒருவன் மரணமாகியுள்ளார்.

இச்சம்பவம் அண்மையில் மஹகல்கடவெல மெதகம பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மெதகம ஜயபிம கனிஷ்ட வித்தியாலயத்தில் ஆண்டு 10 இல் கல்வி பயிலும் சாந்த பிரதீப் புஸ்பகுமார பிரதீப்(16 வயது) என்ற மாணவனே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

காலை 7.45 மணியளவில் பாரிய சத்தம் கேட்டதாகவும் வீட்டிற்குள்ளிருந்து புகை வருவதைக் கண்டு அயலவர்கள் சென்று பார்த்த போது மேற்படி மாணவன் அலுமாரியில் சாய்ந்த படி தலையிலிருந்து இரத்தம் வழிய காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மரணம் தொடர்பாக கல்கமுவ வைத்தியசாலையில் நடந்த பிரேத பரிசோதனையின் போது குண்டு வெடித்ததில் மூளை பாதிக்கப்பட்டு நரம்புகள் பாதிக்கப்பட்டதால் மரணம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆயுத பேர ஊழல் குற்றச்சாட்டு அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் ராஜினாமா!

(புதுடெல்லி, )

ஆயுத பேர ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக ராணுவ மந்திரி ஜார்ஜ் பெர் னாண்டஸ் நேற்று தனது பதவியை ராஜினாமா செய்தார். பிரதமர் வாஜ்பாயை சந்தித்து பேசி விட்டு அவரிடம் விலகல் கடிதத்தை கொடுத்தார். அதோடு ஊழல் புகாருக்கு எந்த ஆதாரமும் இல்லையென்றும் விசாரணைக்கு உத்தரவிடும்படியும் கேட்டுக் கொண்டார்.

டெஹல்கா டாட்காம் இண்டர்நெட் இதழ் வெளியிட்ட போலி ராணுவ பேர ஊழல் புகார் நாடு முழுவதும் சர்ச்சையை ஏற்படுத்தி இருப்பது தெரிந்ததே. இதனால் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரி வருகின்றன.

### மம்தா போர்க்கொடி

இந்த நிலையில் ராணுவ மந்திரி ஜார்ஜ் பெர்னாண்டஸ் தனது பதவியை ராஜினாமா செய்தார். ஆனால் அதை மத்திய மந்திரிசபை நிராகரித்து விட்டது. இந்த நிலையில் அவரது ராஜினாமாவை ஏற்க வேண்டும். இல்லாவிட்டால் ஆதரவை வாபஸ் பெறுவேன் என்று மந்திரி மம்தா மிரட்டினார். அதற்கும் அரசு செவிசாய்க்க வில்லை.

இந்த நிலையில் மம்தா தனது மந்திரி பதவியை ராஜினாமா செய்தார். அரசுக்கு வழங்கும் ஆதரவை வாபஸ் பெறுவதாக அறிவித்தார். பாரதிய ஜனதாவுடன் உறவு முறிந்து விட்டதாகவும் தெரிவித்தார்.

### பெர்னாண்டஸ் விலகல்

இதையடுத்து மத்திய அரசியலில் பரபரப்பு ஏற்பட்டது. இந்த குற்றச்சாட்டில் தனக்கு எந்த தொடர்பும் கிடையாது. உண்மை நிலையை வெளிப்படுத்த தனக்கு வாய்ப்பு அளிக்கும்படியும் சபாநாயகருக்கு மந்திரி பெர்னாண டஸ் கோரிக்கை விடுத்து இருந்தார். இந்த நிலையில் நேற்று மாலையில் மந்திரி ஜார்ஜ் பெர்னாண்டஸ் அதிரடி அறிவிப்பை வெளியிட்டார். மந்திரி பதவியை விட்டு விலகுவதாக அவர் தொலைக்காட்சியில் அறிவித்தார்.

### பிரதமரிடம் கடிதம்

இது குறித்து ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் கூறி இருப்பதாவது:-

என் மீது சுமத்தப்பட்டு உள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் தவறானவை. நாட்டின் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கக் கூடியவை ஆகும்.

எனது 52 ஆண்டு பொது வாழ்க்கை பரிசுத்தமானதாக இருந்து வருகிறது. பொது வாழ்வில் நேர்மையை கடைப்பிடித்து வருகிறேன். ஆனால் அதை களங்கப் படுத்தும் வகையில் டெஹல்கா டாட்காம் வெளியிட்டு உள்ள வீடியோ டேப் மற்றும் உரையாடல் போலியாக, புனையப்பட்டவை ஆகும். அவற்றுக்கு எந்த ஆதாரமும் கிடையாது. போலியான இந்த குற்றச் சாட்டுக்கள் இந்திய ராணுவத்தின் பெருமையை சீர்குலைக்கும் செயல் ஆகும்.

ராணுவத்தில் சில கறுப்பு ஆடுகள் உள்ளன என்பது உண்மை தான். ஆனால் அதே கண்ணோட்டத்தில் அனைவரையும் பார்ப்பது இழிவான செயல் ஆகும்.

எனவே நமது ராணுவத்தின் உயரிய மனோதிடத்தை நிலை நிறுத்தவும் நாட்டின் பாதுகாப்புக்கு மேலும் சேதாரம் ஏற்படாமல் தடுக்கவும் எனது பதவியை ராஜினாமா செய்கிறேன். என் ராஜினாமா கடிதத்தை பிரதமரிடம் ஒப்படைத்து விட்டேன்.

ஆயுத பேரத்தில் ஊழல் நடந்ததாக கூறப்படும் புகார் பற்றி ஒரு விசாரணைக்கு உத்தரவிடும்படி கேட்டுக் கொள்கிறேன். டெஹல்கா டாட்காம் வெளியிட்ட தகவல்கள் பற்றி பிரதமர் விசாரணை நடத்த வேண்டும்.

எதிர்க்கட்சிகளோ பாராளுமன்றத்தை நடத்த விடாமல் தெருவுக்கு வந்து விட்டார்கள். நாட்டுக்கு உண்மையைச் சொல்ல விடாமல் என்னை தடுத்து விட்டார்கள். நாட்டின் பாதுகாப்புக்கு மேலும் சேதம் ஏற்படக் கூடாது என்று தான் எனது பதவியை ராஜினாமா செய்து விட்டேன்.

ராணுவ ஆயுத பேரத்தில் லஞ்சக் குற்றச்சாட்டுகளும் தரகர்களும் எப்போதுமே இருப்பது வாடிக்கைதான். ஆனால் ராணுவ இலாகாவை பரிசுத்தமாக நடத்த வேண்டும் என்று தான் இந்த பொறுப்பு ஏற்றேன். இதற்காகவே நான் புகார் பெட்டிகள் வைத்தேன். அதில் ஆயிரக்கணக்கான கடிதங்கள் வந்தன.

75 கோடி ரூபாய்க்கு மேல் உள்ள ஆயுத பேரங்களை எல்லாம் மத்திய கண்காணிப்பு ஆணையரின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்க கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முடிவு செய்தேன். இது கடந்த கால பேரங்களுக்கு மட்டும் அல்லாமல் இனி நடக்கும் பேரங்களுக்கும் பொருந்தும் என்று உத்தரவு பிறப்பித்தேன்.

ஆயுத விவகாரங்களில் இடைத்தரகர்களை முற்றிலும் ஒழிக்க அரசு நடவடிக்கைகள் எடுத்து உள்ளது. உலகில் இது போன்ற நிபந்தனைகளை விதித்த சில நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

டெஹல்கா டாட்காம் வெளியிட்ட தகவல்களில் காண்டிராக்டும் போலி. அந்த கம்பெனியும் போலி. கம்பெனியும் அந்த தயாரிபபும் உண்மையானதாக இருந்தால் கடுமையான வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். இந்த அருவருக்கத்தக்க செயலால் தேச விரோத சக்திகள் தான் பயன் அடைந்து உள்ளன.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

## ஒரே நாளில் 3 மந்திரிகள் ராஜினாமா

(புதுடெல்லி, )

மத்திய மந்திரிசபையில் இருந்து நேற்று ராணுவ மந்திரி ஜார்ஜ் பெர்னாண்டஸ் (சமதாகட்சி), ரெயில்வே மந்திரி மம்தா பானர்ஜி, வெளியுறவு இணை மந்திரி அஜீத் பாஞ்சா (திரிணாமுல்) ஆகியோர் நேற்று ஒரே நாளில் அடுத்தடுத்து ராஜினாமா செய்தார்கள்.

மம்தா பானர்ஜி ராஜினாமா செய்து இருப்பது இது 3-வது தடவை ஆகும். இதற்கு முன்பு பெட்ரோலிய பொருட்கள் விலை உயர்வு விவகாரத்திலும் மேற்கு வங்காள விவகாரத்திலும் ராஜினாமா செய்து விட்டு பின்னர் வாபஸ் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இன்னும் 20 எம்.பி. மெஜாரிட்டி

தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து பிப்ரவரி மாத தொடக்கத்தில் பா.ம.க. விலகியது. இந்த கட்சிக்கு 5 எம்.பி.க்கள் உள்ளனர்.

இப்போது திரிணாமுல் காங்கிரஸ் விலகி உள்ளது. இந்த கட்சிக்கு 9 எம்.பி.க்கள் இருக்கிறார்கள். இந்த இரு கட்சிகளும் விலகிய போதிலும், வாஜ்பாய் அரசுக்கு ஆபத்து ஏற்பட்டு விடவில்லை. இன்னும் அரசுக்கு 20 எம்.பி.க்கள் பெரும்பான்மையாக உள்ளனர்.

## ஊழல் புகாரில் வாஜ்பாயை சிக்க வைக்கும் டேப் உரையாடல் அம்பலம்

(புதுடெல்லி, )

ஆயுத பேர ஊழல் குற்றச்சாட்டில் பா.ஜ. தலைவர் பங்காரு லட்சுமணனை சிக்க வைத்து டெஹல்காம் இண்டர்நெட் வெப்தளம் செய்தி வெளியிட்டது அல்லவா? இதில் அவர்கள் நடத்திய டேப் உரையாடலை பார்க்கும்போது பிரதமர் அலுவலகத்தை குறிவைத்து வாஜ்பாயை ஊழல் புகாரில் சிக்க வைக்க முயன்று இருப்பது தெரிய வந்துள்ளது.

ஆயுத பேர ஊழலை அம்பலப்படுத்துகிறோம் என்ற பெயரில் போலி நாடகம் மூலம் பா.ஜ. தலைவர் பங்காரு லட்சுமணன், சமதா தலைவர் ஜெயா ஜெட்லி ஆகியோர் லஞ்சம் வாங்கியதாக குற்றம்சாட்டி டெஹல்கா டாட் காம் என்ற இண்டர்நெட் இதழ் பரபரப்பு ஏற்படுத்தியது அல்லவா?

ஆயுத விற்பனை ஒப்பந்தத்தில் எங்களுக்கு உதவி செய்ததற்காக நாங்கள் உங்கள் கட்சிக்கு அளிக்கும் நன்கொடை என்று கூறி பணத்தை கொடுத்து அதை ரகசிய காமிராவில் பதிவு செய்து ஊழல் அம்பலமானதாக கேசட் வெளியிட்டு உள்ளனர்.

டெஹல்கா ஆட்கள் இதற்காக பங்காரு லட்சுமணனிடமும், ஆர்.எஸ்.எஸ். ஆர்.கே. குப்தாவுடன் பேசிய உரையாடலை கவனிக்கும் போது ஒரு உண்மை புலப்படுகிறது. அவர்கள் கேள்வி ஒரு இதழாளர்கள் கடமையை மீறி குறிப்பிட்ட சிலரை வலையில் சிக்க வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அமைந்துள்ளன. குறிப்பிட்ட சிலர் வேறுயாருமல்ல பிரதமர் வாஜ்பாயின் முதன்மை செயலாளர் பிரிஜேஸ் மிஸ்ராவும், வாஜ்பாய் மருமகன் ரஞ்சன் பட்டாச்சாரியாவும்தான். இவர்களை இந்த வலையில் சிக்க வைப்பதன் மூலம் வாஜ்பாய்க்கு நெருக்கடி ஏற்படுத்துவதே இவர்கள் நோக்கம். அதோடு அரசில் முக்கிய பங்கு வகிக்கும் ஜார்ஜ் பெர்னாண்டசையும் களங்கப்படுத்தி வீழ்த்துவ்தும் இவர்கள் திட்டம்.

## கவர்ச்சிப் பாடகி கார் ஓட்டத் தடை


இங்கிலாந்தை சேர்ந்த கவர்ச்சிப் பாடகி ஜெரி ஹல்லிவெல். சம்பவத்தன்று அங்குள்ள ஹெர்போர்ட் ஷெயர் பகுதியில் காரை ஓட்டியபடி சென்றார். அப்போது அனுமதிக்கப் பட்ட வேக அளவை விட 2 மடங்கு கூடுதல் வேகத்தில் கார் ஓட்டினார். அதனால் அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. கோர்ட்டில் குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டார்.

சாலையில் அமைக்கப்பட்டு இருந்த கண்காணிப்பு கேமராவும் அவர் 2 மடங்கு வேகத்தில் பறந்ததை படம் பிடித்து இருந்தது. கோர்ட்டில் இந்த வழக்கு விசாரணை நடந்தபோது அருகில் அமர்ந்து இருந்த பாய் பிரண்டுடன் ஜாலியாக பேசிக் கொண்டிருந்தார், ஜெரி.

இறுதியில் தீர்ப்பு கூறப்பட்டது. ஜெரி கார் ஓட்ட 42 நாள் தடை விதிக்கப்பட்டது. மேலும் 28 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. கோர்ட்டைவிட்டு வெளியேறியபோது நீதிபதி பெஞ்ச் பக்கம் சிரித்தபடி ஜெரி கைய் சைத்தார். நன்றி, நலம் உண்டாகட்டும் குட்பை என்றபடி வெளியேறினார், ஜெரி.

## செத்த பிறகும் பணம் குவிக்கும் உலக பிரபலங்கள்

நீ... இருந்து பத்து பைசாவுக்கு பிரயோஜனம் உண்டா? என்று பாமர ஜனங்கள் பேசிக்கொள்வதை பார்க்கலாம். ஆனால் இங்கிலாந்து இளவரசி டயானா, அமெரிக்க ஹாலிவுட் நடிகை மர்லின்மன்றோ போன்ற உலக பிரபலங்கள் செத்த பிறகும் பணம் குவிக்கிறவர்களாக இருக்கிறார்கள் என்பது பற்றிய தகவல் கிடைத்து உள்ளது. இப்படி செத்த பிறகு பணம் குவிந்ததில் எல்விஸ்பிரிஸ்லி முதலிடம் பெறுகிறார். இவர் இறந்த பிறகு ரூ.161 கோடி திரண்டது. மறைந்த உலக பிரபலங்களில் இப்படி பணம் குவிக்கும் பட்டியலில் நடிகை மர்லின்மன்றோ 12-வது இடம் பெறுகிறார். வாழ்ந்த காலத்தைவிட இந்த உலக பிரபலங்கள் மறைந்த பிறகும் சம்பாதிக்கிறார்கள் என்பது ஆச்சரியமான விஷயம்.



ஆசியாவிலேயே மிக உயரமான திருவரங்கம் கோவில் ராஜ கோபுர கலசங்களில் புனித நீர் ஊற்றப்படுவதையும். அதைக்காண திருவரங்கத்தின் 4 வீதிகளிலும் திரண்டு நிற்கும் பக்தர்கள் கூட்டத்தையும் படத்தில் காணலாம்.

# போதனைகளை விடுத்து சாதனைகள் செய்வோம் பெண்ணிலைவாதம் தூஷணை வார்த்தையல்ல

## மகளிர்தின விழாவில் சாந்தி சச்சிதானந்தம், வாசுகி ஜெயசங்கர் உரை

(அலுவலக நிருபர் க.ஜெகதீஸ்வரன்)

பெண் விடுதலை ஏன் பெண்களுக்கான பிரச்சினையாக மட்டும் கருதப்பட வேண்டும். பெண்களுக்கு உரிமை வழங்க வேண்டும் என்பதில் ஆண்களிடையே ஒருமித்த கருத்துக்கள் இருந்த போதிலும், பெண்ணிலைவாதம் எனக் குரல் கொடுக்கும் போது மட்டும் தூஷண வார்த்தை போல் கேட்க மறுக்கிறார்கள். குழந்தைகள் பிறந்த போதும், வளர்ந்து வரும் போதும் ஆண்களை நாம் இதைச் செய்ய வேண்டும். இதைச் செய்யக் கூடாது என்றும், பெண்களை சமைக்கப் பழகு, மரத்தில் ஏறாதே, பெண் மென்மையானவள் போன்ற எண்ணத்தை வளர்த்து வருகிறோம்.

இவ்வாறு சூரியா அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த வாசுகி ஜெயசங்கர் தெரிவித்தார்.

நேற்றுக் காலை சார்ள்ஸ் மண்டபத்தில் மட்டக்களப்பு மாவட்ட உள்;ராட்சி சபைகளும், உள்ளூராட்சித் திணைக்களமும் இணைந்து நடாத்திய மகளிர் தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து தொடர்ந்து பேசுகையில்,

காந்தி சிலையிலிருந்து ஆரம்பமான ஊர்வலத்தில் பெண் விடுதலைக்கு ஆதரவான கருத்துக்களை தெரிவிக்கும் வாசகங்கள் அடங்கிய பதாதைகளை நாங்கள் ஏந்த மாட்டோம். இது உங்களுடைய பிரச்சினை நீங்கள் தான் ஏந்திப் பிடிக்க வேண்டும் என சிலர் சம்பாஷித்ததை நான் அவதானித்தேன். இந்தப் பிரச்சினையை ஏன் பிரித்துப் பார்க்கிறீர்கள் என வினாவியதோடு பெண்கள் மென்மையானவர்கள். ஆண்கள் வலிமையானவர்கள் என்ற கருத்தியல் ஆண்களிடையே நிலவுவது தவறு எனவும் குறிப்பிட்டார்.

எல்லா ஆண்களும் வலிமையானவர்களா? எல்லாப் பெண்களும் மென்மையானவர்களா? பெண்கள் பாரம் சுமப்பவர்களாக, அரிசி குத்துபவர்களாக, விளையாட்டு வீராங்கணைகளாய், பெண் போராளிகளாய் இருக்கிறார்கள். அதேபோல் சமுதாயத்தில் இலகுவான, மென்மையான வேலைகளைச் செய்யும் ஆண்கள்ள நீங்கள் அவதானிக்கவில்லையா?

இதன்படி வேலைகளை ஆணுக் குரியது. பெண்ணுக்குரியது என வரைவிலக்கணப்படுத்தி அதனைத் தணிப்பதும் வன்முறையே.

அதுபோல் தந்தையோ , மகனோ தனக்கான உணவை, தேநீரைக்கூட தயாரிக்க முடியாதவர்களாக வைத்திருப்பதும் அடக்குமுறைதான்.

கலாசாரம் என்றால் மாறாமல் அப்படியே வைத்திருக்க வேண்டியதா? பாரம்பரியமான உணவு, விவசாயம், தொழில், உடை, மருத்துவம், கல்வி போன்றவை தற்போது எவ்வளவு நவீன மாற்றங்களைக் கண்டுள்ளன. உணவிலிருந்து உடைவரை மாற்றத்திற்குள்ளாகும் போது பெண்கள் விடயத்தில் தங்களுக்கு எதிரான விடயத்தை கலாசாரம் என்ற போர்வைக்குள் திணிக்கலாமா? எனக் கேள்வி எழுப்பினார் வாசுகி ஜெயசங்கர்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மா.தயாபரன் தனது தலைமையுரையில், பெண்கள் விடுதல்ல சம்பந்தமான சிந்தனையை கிராம மட்டத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும். அதனையே செய்கிறோம்.

நாம் கோசங்கள் ஊடாக மக்களின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. கருத்துக்களின் மூலமும் விளம்பரம் மூலமும் அதனைச் செய்யலாம் எனக் குறிப்பிட்டார்.

விஷேட விருந்தின்ராகக் கலந்து கொண்ட பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு பேசுகையில்; பெண்கள் தினத்தை உள்ளூராட்சி சபைகள் முன்னின்று நடாத்துவது இதுவே முதல் தடவை. பெண் விடுதலை பற்றிய சிந்தனைகள், கருத்துக்கள் நிர்வாக ரீதியாக முன்னெடுக்கப்படுவது பெண் விடுதலையின் அவசியத்தையே சுட்டிக்காட்டுகிறது.

சமுதாயத்திலுள்ள ஒரு சிலரால் பேசப்பட்ட விடயம் இன்று இடையாளம் காணப்பட்டு பேசப்படுவது வரவேற்கத்தக்கது என்றார். அத்துடன் மகளிர் தினம் எப்படி ஆரம்பிக்கப்பட்டது பற்றியும் அதன் அவசியம் பற்றியும் வலியுறுத்திக் கூறினார்.

சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்து கொண்ட திருமதி சாந்தி சச்சிதானந்தம் பேசுகையில் ஆண்கள் இன்றைய நாளில் சமூகப் பிரச்சினைகளுக்கும் துன்பங்களுக்குமாக சிந்திக்கும் நாள் எமது சோகங்களைச் சொல்லி துக்கமனுஷ்டிப்போம். சந்தோசங்களைச் சொல்லி சந்தோஷிப்போம். சமாதானத்திற்கு முதலில் குரல் எழுப்பியவர்கள் பெண்கள்தான்.

பெண்கள் அனைவரும் ஒன்று கூடி சமுதாயத்தில் பெண்களுக்கான எதிர்ப்புக் கட்டுமானங்களை தகர்த்தெறியும் மாபெரும் சமுத்திரமாக ஒன்றுகூடிய நாள் பெண்கள் தினம்.

ஒரு பொருளாதாரத்தின் மாற்றத்தில் பெண்கள் இருக்க வேண்டும். நாம் எல்லாம் சிறுதுளி. ஆனால் பெருவெள்ளம். எங்களுக்கு முன்னால் பலர் வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். எனவே போதனைகள் தேவையில்லை. சாதனைகள் செய்யப் புறப்படுவோம். என்றார்.

"தடாகம்" இணைப்பாளர் சந்தரா பேசுகையில் பெண் விடுதலை இன்று மட்டும் பேசி முடித்துவிடும் நாள் அல்ல. நமது பிரதேசத்திலே உழைக்க முன்னேற முடியாத நிலையிலேயேதான் பெண்கள் வெளிநாடு செல்கிறார்கள். தொடரும் யுத்தத்தால் குடும்பத்தலைவன் பாதிப்படைந்தால் குடும்பப் பொறுப்பை பெண்ணே சுமக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை. யுத்தம் தனியே சம்பந்தப்பட்டவர்களை மட்டுமே பாதிப்பதல்ல. அது பெண்களையே அதிகம் பாதிக்கிறது. யுத்தம் முடிவடையும் வரை பெண்கள் உரிமைகள் பாதிக்கப்படும் என்றார்.

மாவட்ட அரச அதிபர் இ.மோனகுருசாமி பேசுகையில் ஆரம்ப காலத்தில் ஆண்களே அதிகமான உரிமைகளைப் பெற்றனர். ஒரு சிறந்த சமுதாயத்திற்கான ஆரம்பம் பெண்களுக்கான சமுதாய உரிமையை சுதந்திரத்தை வழங்கும்.

பெண்களுக்கு எவ்வளவு உரிமை வழங்கப்படுகிறதோ அந்தளவிற்கு சமூகம் முன்னேறும் என்றார்.

மாநகர, நகர, உள்ளூராடசி சபைகளைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்ட இவ்விழாவின் வரவேற்புரையினை அன்பழகன் குருஸ் வழங்கினார். சூரியா அபிவிருத்தி நிலையத்தினரால் மகளிர் கீதம் இசைக்கப்பட்டது.

மட்டு மாநகர சபை பொறியியலாளர் சித்திராதேவி வேலுப்பிள்ளை உட்பட பிரதேச செயலாளர்கள், அதிகாரிகள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்ட இவ்விழ்ாவில் "பெண்களின் ஆற்லைக் கொண்டாடுவோம்" என்னும் நாடகத்தினை தொடர்ந்து சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.நிர்மலா ஜெயராஜா நன்றியுரையாற்றினார்.

# முஸ்லிம் சமூக விழுமியங்களை வெளிப்படுத்த சஞ்சிகைகள் வரவேண்டும்

## ஞானம் கலந்துரையாடலில் கருத்துரை

(மருதமுனை ஹரீஷா)

முஸ்லிம் சமூகத்தின் கலாச்சார இலக்கிய விழுமியங்களை பின்பற்றக்கூடிய வகையில் சஞ்சிகைகள் வெளிவராமலிருப்பது கவலைக்குரியதாகும். பின்தங்கியிருக்கின்ற இஸ்லாமி[illegible] இலக்கியங்களை வெளிக்கொ[illegible] வரக்கூடிய சஞ்சிகைகள[illegible]வாக்கப்படவேண்டும்.

இவ்வாறு மருதமுனை ஸம்ஸம் வீதியில் அண[illegible]யில் நடைபெற்ற "ஞானம்" சஞ்சிகை தொடர்பான கலந்துரையாடலில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய பேராதனைப் பல்கலைக்கழக மெய்யியல் துறை முதுநிலை விரிவுரையாளரும் பன்னூலாசிரியருமான கலாநிதி எம்.எஸ்.எம்.அனஸ் கூறினார்.

விரிவுரையாளர் ஏ.கே.எல். வஸீல் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. ஓய்வுபெற்ற அதிபர் ஏ.எம்.ஏ.ஜெமீல் பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எம்.நஸீர் அஹமட், ஸம்ஸ் [illegible]த்திய கல்லூரி அதிபர் ஏ.எம்.ஏ. ஸமட், கலாபூஷணம் செய்யது ஹஸன் மௌலானா எஸ்.ஆர்.எம். எஸ்.மௌலானா, கவிஞர்கள் எம்.எச்.ஏ.கரீம் மருதமுனைக் கலீல், மருதமுனைக் காதர், மருதமுனை எம்.எம்.விஜிலி மற்றும் ஏ.ஆர்.எம். பறகத்துல்லா உட்பட பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.



கல்முனை சமாதான அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த 2001.03.08ம் திகதி மருதமுனை மக்கள் மண்டபத்தில் கொண்டாடப்பட்ட சர்வதேச மகளிர் தின வைபவத்தில் மௌலவியா ஜனாபா பௌசுல் ஹினாயா அஹமதுல் அன்ஸார் மௌலானா சிறப்புரையாற்றுவதையும் கலந்து கொண்ட பெண்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படமும் தகவலும் :- மருதமுனை ஹரீஷா)




அண்மையில் கல்முனை நகர லயன்ஸ் கழகம் கல்முனை திருவள்ளுவர் மன்றத்திற்கு வெற்றிக் கேடயங்களை வழங்கியது. படத்தில் லயன்ஸ் கழக செயலாளர் இ.தயாளன் வெற்றிக் கேடயங்களை திருவள்ளுவர் மன்றத் தலைவர் பி.குலசேகரத்திற்கு வழங்குவதையும், அருகில் லயன்ஸ் கழக புனர்வாழ்வுத் தலைவர் எந்திரி கா.பகீரதன் லயன்ஸ் கழக பொருளாளர் நித்தியானந்தம் நிற்பதையும் காணலாம்.
(படம் - ரவீந்திரன்)

# சனநாயகம்..........

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தானாகவே பதவி விலகினார். இவருடைய இடத்திற்கு வந்த றணசிங்க பிறேமதாச ஒரு சிங்களப் பேரினவாதி. இவர் இந்தியத் துருப்புக்களை வெளியேறும் படி பணித்தார். அது அவ்வளவு புத்திசாலித்தனமானதல்ல. சிறிலங்காவுக்காக அவர்கள் மிகவும் கேவலமானதொரு வேலையைச் செய்து கொண்டிருந்தனர். இந்தியத் துருப்புக்கள் வெளியேறியபின் அவருடைய நிலை மோசமடைந்தது. அவர் தமிழ்ப்புலிகளுடன் நடத்திய சமரசப் பேச்சுக்கள் தோல்வி கண்டன. அவரும் மிகவும் குறைந்தளவு உரிமைகளையே கொடுக்கத் தயாராக இருந்தார்.

அவர் சிங்கப்பூருக்கு வரும்போது பலமுறை சந்தித்துள்ளேன். போர் சிறிலங்காவின் பிணக்கை முடிவுக்குக் கொண்டு வராது என்று பிரேமதாசவுடன் வாதிட்டேன். அரசியல் தீர்வு ஒன்றுதான் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு திருப்தியளிக்கும் என்று அவரிடம் சொன்னேன். தன்னாட்சி கோரிப் போரிட்ட மிதவாத தமிழ்க் கூட்டணிக்கும் முழு உலகிற்கும் நியாயமான அரசியல் தீர்வு ஏற்புடையதாகும் என்றும் அவருக்கு இடித்துரைத்தேன். உங்களுடைய குறிக்கோள் தமிழ் 'பயங்கரவாதிகளுக்கு' தமிழ் மக்கள் அளிக்கும் ஆதரவை இல்லாதொழிப்பதாக இருக்க வேண்டும். இதற்கு தமிழர்களுக்கு தன்னாட்சி வழங்குவதே சிறந்த உபாயம் என்று நான் அவருடன் வாதிட்டேன்.

தமிழ்ப்புலிகளைத் தன்னால் அழிக்க முடியும் என்று அவர் முழு மூச்சாக நம்பினார். 1991, 1992 இல் பெரும் படையணிகளை அவர் புலிகளுக்கு எதிராக அனுப்பினார். அவருக்கு பூரண வெற்றி கிடைக்கவில்லை.1993இல் ஒரு மேதின ஊர்வலத்தில் ஒரு தற்கொலை குண்டுதாரி அவருக்கு முடிவு கட்டினார். இன்னும் பலர் அப்போது இறந்தனர்.

பிரேமதாசவுக்குப் பின் அதிபர் பதவியைப் பிடித்த சந்திரிகா குமாரதுங்கா பேச்சுவார்த்தையையும் போரையும் அடுத்தடுத்துக் கைக்கொண்டார். யாழ் தீபகற்பத்தை அவர் மீண்டும் கைப்பற்றினார். ஆனால் அவரால் தமிழ்ப்புலிகளை அழிக்க முடியவில்லை. போர் தொடர்கின்றது. அமைதிக்கும் போதும் என்ற மனநிலைக்கும் 'செறெண்டிப் பற்றி (Serendipity) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். சிலோனின் புராதன காலப் பெயரான செறெண்டிப் (Serendip) என்பதில் இருந்து செறண்டிப்பிற்றி பிறந்தது. இந்தத்தீவு துன்பத்திற்கும் இடைவிடாத போருக்கும் இருப்பிடமாக இருப்பதைப் பார்க்கும் போது வேதனையாக இருக்கிறது.

இவ்வருடம் (2000) சிங்கப் பூரின் முன்னாள் பிரதமர் லீ குவான் யூ வெளியிட்ட "மூன்றாம் உலகில் இருந்து முதலாம் உலகிற்கு சிங்கப்பூரின் கதை 1956 -2000 (From Third World to First: The Singapore Story 1956 - 2000) என்ற நூலில் இருந்து திரட்டி தமிழாக்கம் செய்யப்பட்டது.

# இடி அமீன் நாட்டில் என்ன நடக்கிறது?
# போர்ணியோ எரிந்தது!
# சந்திரிகா போல ஒரு பெண்!

## இடி அமீன் நாட்டில் என்ன நடக்கிறது?

உகண்டாவைப் பற்றி நினைத்தால் எல்லோருக்கும் உடனே இடி அமீனின் நினைவே ஓடி வரும்! இடி அமீனின் ஆட்சிக்குப் பின்பு பல ஆட்சிகள் ஓடி மறைந்து விட்டன! புதிய ஜனாதிபதி தேர்தல் ஒன்று நடக்க இருக்கின்றது. 1996 ஆம் ஆண்டில் 75% மான வாக்குகளை வென்று ஜனாதிபதி ஆனவர் ஜோவேரி முசவேணி ஆகும். இவர் இத்தேர்தலில் போட்டியிடுகின்ற போதிலும் கடுமையான போட்டிக்கு முகம் கொடுக்கின்றார். இவர் நல்லாட்சி செய்தபோதிலும் பல குற்றச் சாட்டுக்களுக்கு முகம் கொடுக்கிறார்.

இவரை எதிர்ப்பதற்குக் களத்தில் இறங்கி இருப்பவர் டாக்டர் பெசிக்ஜி ஆகும். (DR.Besigye) இவர் ஒரு சத்திர சிகிச்சை நிபுணர். முசவேணி அவர்களை முன்பு பதவிக்குக் கொண்டு வருவதில் இவருக்குப் பெரும் பங்கு இருந்தது. ஜனாதிபதிக்கே டாக்டராகவும் இருந்தவர்.

அத்துடன் முசவேணியின் அமைச்சராகவும் இருந்தவர். ஒரு கட்சியும் இல்லாத ஓர் அரசியலுக்கு இவர் முன்பு குரல் கொடுத்தார்(No party political system) பின்பு அவரின் ஆதரவாளர்கள் வேண்டிக் கொண்டபடி ஒரு கட்சி ஆட்சிமுறைக்கு(One party political system) ஆதரவு தந்தார். இவரின் எதிரணியினர் ஜனநாயகக் கட்சியில் பவுல் செமோக்கறர்(Paul Ssemogerere) தலைமையில் ஒன்று கூடி இவரை எதிர்ப்பதற்குத் தயாராகி வருகின்றனர்.(அரசியல் கட்சிகள் பல இயங்கி வந்தாலும் அவை பல முனைகளில் ஒடுக்கப்பட்டு உள்ளன) முன்பு ஒரு கட்சி ஆட்சி முறைக்கு தனது ஆதரவை வழங்குவேன் எனக் கூறிய டாக்டர் பெசக்ஜி இப்போது பல கட்சி ஆட்சி முறையினை ஆதரிக்கப் போவதாக கூறியுள்ளார்.

திக்கவயல்
தர்மகுலசிங்கம்

### முசவேனியின் கருத்து

முசவேணி கருத்துத் தெரிவிக்கையில் உகண்டாவின் கஸ்டங்கட்கு எல்லாம் காரணமாக அமைந்தது. பல கட்சி ஆட்சி முறையே எனவும் கூறுகின்றார். இடி அமீன் போன்றவர்களும் உகண்டாவின் ஆட்சியைக் கைப்பற்றக் காரணம் பல கட்சி ஆட்சி முறையே எனக் கூறினார். அத்துடன் இடி அமீனுக்கு முன்னும், பின்னும் ஆட்சி நடத்திய மில்ரன் ஒபட்டேயையும் குறை கூறத்தயங்கவே இல்லை.

### பொற்காலம்

முசவேனி உகண்டாவின் ஆட்சியாளராக 16 ஆண்டு காலம் பதவி வகித்து இருக்கிறார். இடி அமீன் மில்ற்றன் ஒபட்டே ஆகியோருடன் ஒப்பிட்டால் அந்நாட்டின் பொற்காலமும் ஆகும். பொருளாதாரத் துறையில் ஒவ்வொரு வருடமும் 6.4 வீத வளர்ச்சியைக் காட்டி உலக வங்கி மெச்சக் கூடிய அளவுக்கு நாடு முன்னேறியுள்ளது.

### எதிர்த்தரப்பின் குறை கூறல்

எதிர்த்தரப்பின் ஜனாதிபதி அபேட்சகர் டாக்டர் பெசக்ஜி விடுவதாக இல்லை. முசவேனியின் ஆட்சி ஊழல் நிறைந்தது என்றும் சலுகைகள் படர்ந்தன என்றும்(Nepotism) கொங்கோ யுத்தத்தில் கலந்து கொண்ட களங்கமான அரசு என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். அத்துடன் தன்னிச்சைப்படி நடப்பவர் (Autocratic) என்றும் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.


டாக்டர் பெசக்ஜியின் ஆதரவாளர்கள் பேரணியில் காணப்படுகின்றனர்.

டாக்டர் பெசக்ஜியின் அணியும் பலம் பெற்று வருகின்றது.

இவரின் அணிக்குப் பலம் கொடுப்பவர் கம்பாலாவின் பழைய மேயர் திரு.செமோக்கறர் நாகர் செகக்லா என்பவரும் இந்த அணியின் ஆதரவாளர். இவரின் மனைவியின் பெயர் வின்னி பயானியா. இவர் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தவர். ஜனாதிபதியாக இருந்து முசவேனியுடன் நட்பாக நன்கு பழகியவர்.

எது எவ்வாறு இருப்பினும் உகண்டாவில் முறுகல் நிலை அரசியலில் இருப்பதாகவும் அது எந்த நேரத்திலும் வெடிக்கும் என்றும் அவதானிகள் கருதுகிறார்கள்.

### வெற்றியும் தோல்வியும்

முதலாவது சுற்றுத்தேர்தலில் முசவேனி வெற்றியடைந்து விடுவர் எனக் குறிப்பிட்ட போதிலும் 1996 இல் இவர் ஏற்படுத்திய மிகப் பெரிய வெற்றியை அடையமாட்டாராம்! மேலே குறிப்பிட்டுக்காட்டிய இருவரைத் தவிர மேலும் நாலு பேர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றார்கள் இவர்கள். பத்து வீதமான வாக்குகளை மொத்தத்தில் பெறுவார்கள் எனச் சொல்லப்படுகின்றது. உகண்டாவின் வாக்காளர் தொகை 13.6 மில்லியனாக அதிகரித்து உள்ளது.

நாட்டுப்புற மக்களின் ஆதரவு முசவேனிக்கு இருக்கிறதாம். அதனால் வெற்றி அவருக்கு உண்டு என்றும் சொல்லப்படுகின்றது. இருப்பினும் முடிவுகள் விரைவில் வந்து யார் ஜனாதிபதி என்பதை விரைவில் அறிவித்து விடும்.

பிந்திய செய்தியின் படி நடந்து முடிந்த தேர்தலில் முடிவுகளின் படி முசவேணி அதிக வாக்குகளால் வெற்றி பெற்று மீண்டும் உகண்டாவின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

## போர்ணியோ எரிந்தது!

இந்தோனேசியா பெரியநாடு. இப்போது பெரும் சிக்கல்கள் உள்ள நாடாக உருமாறி விட்டது. ஒரு வாரம் கூட, இந்த நாட்டில் அமைதியாகக் கழிந்தது இல்லை. சென்ற 15 நாட்களுக்குள் 'ஆச்' என்ற மாநிலத்தில் 17 பேர் சுட்டு கொல்லப்பட்டுள்ளார்கள். இந்த நேரம் பார்த்து இந்தோனேசியாவை ஆட்சி செய்யும் ஜனாதிபதி வாஹிட் நாட்டில் இல்லை. இந்நிலையில் போர்ணியாவில் ஏற்பட்ட கலவரம் இந்தோனேசியாவுக்குத் தாழ்வினையே கொண்டு வந்துள்ளது.

போர்ணியோவில் ஏற்பட்ட கலவரங்கள் குடியேற்றவாதக் காரணங்களாலேயே ஏற்பட்டது. போர்ணியோவின் சுதேசிக டயக்(Dayak) இன மக்களாகும். ஜாவாவின் கிழக்குப் பகுதியில் உள்ள மதுராத் தீவில் இருந்து மதுரீஸ் இனத்தினர் இங்கு குடியேறி இருந்தார்கள். இக்குடியேற்ற நாட்களின் முரண்பாடுகள் சாம்பிற் (Sampit) நகரத்தில் முரண்பாடுகளாக வெடித்தன. பிராந்தியத் தலைநகரான பலங்கரயா(Pal angaraya) என்ற இடத்திலும் காட்டுப் பக்கங்களில் 500 மதுரீஸ் இன மக்கள் கொல்லப்பட்டு உள்ளார்கள். 30,000 மதுரீஸ் இன மக்கள் அவ்விடம் விட்டு ஓடியுள்ளார்கள். பொலிசார் தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்றே அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏனெனில் 118 மூரிஸ் இன மக்கள் அவ்விடம் சித்திரவதை செய்யப்பட் டுள்ளார்கள்.

இந்நிலையில் .றோம் நகரம் பற்றி அறிந்த போது பிடில் வாசித்த நீரோ மன்னனுக்கு ஒப்ப நாட்டை விட்டு மக்கா சென்ற இந்தோனேசிய ஜனாதிபதி வாஹிட் விமர்சிக்கப்படுகின்றார்.

## பெருவில் சந்திரிகா போல் ஒருவர்

பெருவில் ஜனாதிபதி தேர்தல் விரைவில் நடைபெற இருக்கிறது. இரண்டு பேரின் பெயர்கள் இத்தேர்தலில் அதிக புழக்கத்தில் இருக்கின்றன. (1) அலிஜன்ட்றோ ரொலிடோ (Alegandre Toledo) அடுத்தவர் செல்வி புளோஸ்(Plores) பிளோசின் பிரசாரங்கள் மக்களைக் கவர்ந்து வருகின்றன. இருபத்து ஐந்து சதவீத வாக்குகள் பிளோசுக்கு விழுமென நம்பிக்கை தெரிவிக்கப் படுகின்றது. இவர் ஒரு சட்டத்தரணி தலைநகர் விமாவில் நன்கு அறியப்பட்டவர். இவர் சார்ந்திருக்கும் கட்சி பிரவேசம் பற்றி பெருமை அடையும் ஒருவர் இவர். விவாதங்களில் கில்லாரி கிளின்டன் போல் பிரகாசிக்கின்றார். ஆண்கள் போல் நீளக்காற்சட்டை போடும் இயல்பினர். இவர் தனது வர்த்தகம் சம்பந்தப்பட்ட கொள்கைகளால் வர்த்தகர்களிடம் நிறைய வரவேற்புப் பெற்றுள்ளார். இதே சமயத்தில் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியில் போட்டியிடும் குராயடா 3 லட்சம் புதிய பதவிகள் இளைஞர்களுக்குக் கொடுக்கப்படும் எனக் கூறுகிறார். இந்நிலையில் வெற்றி யாருக்கு? விரைவில் பதில் கிடைக்கும்


## அயல் உலக அரசியல்


போர்ணியோ எரிகிறது!

பெரிய நாட்டின் ஒரு பகுதி எரிகிறது!
பெரிய நாட்டின் சிறுமி செய்வது அறியாது திகைக்கிறாள்.


செல்வி பிளோஸ்

செல்வி பிளோஸ் பேசும் போது நமது நாட்டின் ஜனாதிபதி சந்திரிகா போல் இருக்கும்!



## கடந்து போன சில உலகச் செய்திகள்

◆ மெக்சிக்கோவின், சப்பாத்திஸ்ட் லிபரேசன் ஆமி என்ற போராளிக் குழு மெக்சிக்கோ முழுவதும் அமைதி ஆர்ப்பாட்டம் ஒன்றினைச் செய்ய இருக்கிறது. இதன் தலைவர் மார்கோஸ் இதன் முக்கிய நோக்கம் அங்கு வாழும் 10 மில்லியன் இந்திய மக்களின் உரிமையை நிலை நாட்டல்!

◆ ஜப்பானின் முன்னாள் தொழில் அமைச்சர் மசகுனி முருகாமி கைது செய்யப்பட்டுள்ளார். ஊழல் குற்றச்சாட்டே இதற்குக் காரணம்.

◆ சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சென்ற குடியரசு மால்டோவா இங்கு பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

◆ பெருவின் முன்னாள் ஆட்சியாளர் அல்பேட்டோ பியூஜிமோரி நாட்டை விட்டு வெளியேறி ஜப்பானில் சரண் அடைந்தது தெரிந்ததே. இவரை விசாரணைக்கு பெருவுக்கு அனுப்புமாறு பெருநாட்டு அரசாங்கம் கோரியுள்ளது.

◆ கொங்கோ நாட்டில் நிலை கொண்டிருந்த றுவண்டா. உகண்டா நாட்டுப் படைகள் பல அங்கிருந்து தாயகம் திரும்பியுள்ளன.

◆ தெற்கு அல்ஜீரியாவில் அகதி முகாமில் நிலை கொண்டுள்ள மேற்கு சகரன் (western saharan) சுதந்திர இயக்கம் தமது 25 வருட போராட்டத்தினை நினைவு கூரும் முகமாக மிலிட்டரி பரேட் ஒன்றினை நடத்தியுள்ளது. இந்த 25 வருடங்கள் மொறக்கோ நாட்டுடனான பிரச்சினையில் எதுவித இணக்கமும் காணப்படவில்லை.

◆ சூடானில் இயங்கும் குழந்தைகட்கான யூ.என்.ஏஜன்சி உள்ளூர்ப் போர் முனைகளில் இருந்து 2500(இரண்டாயிரத்து ஐந்நூறு) குழந்தைப் போர் வீரர்களை மீட்டெடுத்து வந்துள்ளது.





# விளையாட்டு வீரர்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்

(அட்டாளைச்சேனை நிருபர் எம்.ஏ.றமீஸ்) **–பிரதிக்கல்வி அமைச்சர்–**

விளையாட்டின் மூலம் உடல், உள வளர்ச்சி ஏற்படுகிறது மட்டுமல்லாது தூய சிந்தனையும் உண்டாகின்றது. அவ்வாறான விளையாட்டினை சிறந்த முறையில் போதிய பயிற்சியுடன் விளையாட வேண்டும். இன்று பார்ப்போமே யானால் பல்வேறு விளையாட்டு வீரர்கள் உயர்ந்த நிலையிலும், பலருக்கு முன் மாதிரியாகவும் இருக்கிறார்கள் என அண்மை யில் நியூஸ்டன் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த அம்பாறை மாவட்ட கழகங்களுக் கிடையே நடாத்திய மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டியின் இறுதி விழாவில் கலந்து கொண்ட பிரதிக்கல்வி அமைச் சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசிய பிரதித் தவிசாளருடன் ஏ.எல்.எம்.அதா வுல்லா அவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

அமைச்சர் அவர்களின் தொடர்ச்சியான உரையின் போது விளையாட்டுக்கழகங்கள் தமக் குத் தேவையான உதவிக ளை என்னிடம் அணுகிக் கேட்கலாம். எனக் கேட்டுக் கொண்டதுடன் அவ்வேளை அருகிலிருந்த அந்-நூர் வித்தியாலயத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கும், பேண்ட் வாத்திய இசைக் கருவிகள் வழங்குவ தாகவும், மைதானத்தின்ன மிக விரைவில் செப்பனிட்டுத் தருவதாகவும் வாக்களித்தார்.





செவிப்புலன் அற்றோருக்கான விளையாட்டுப் போட்டியில் ஓட்டப்போட்டியில் பங்கு பற்றியோர் போட்டிக்குத் தயார் நிலையில் நிற்பதையும் மட்/கல்விப் பணிப்பாளர் ரி.பொன்னம்பலம் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்குவதையும் படத்தில் காணலாம்.

## ஒலிம்பிக் மேடை திறப்பு விழா

(எழுவான்).

களுவாஞ்சிகுடி நியூ ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தினருக்காக பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராஜா அவர்களின் பாராளுமன்ற நிதியிலிருந்து அமைக்கப்பட்ட மேடை, சரஸ்வதி வித்தியாலய மைதானத்தில் அமைந்துள்ளது.

இதன் திறப்பு விழா அண்மையில் இடம் பெறுவதற் கான ஆயத்தங்களை நியூ ஒலிம்பிக் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின் றது.

## 2006 இல் கொமன்வெல்த் விளையாட்டு விழா

(முபா).

2006 இல் அவுஸ் திரேலிய மெல்போன் நகரில் கொமன்வெல்த் விளையாட்டு விழா நடைபெறவிருக்கின்றது. இப்போட்டி மார்ச் 15-26 வரை 12 தினங்கள் இடம் பெறும். 1956ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை மெல்போன் நகர் நடத்தியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

6000க்கு மேற்பட்ட போட்டியாளர்களும் உத்தியோ கத்தர்களும் கலந்து கொண்டு சிறப்பிப்பர் என தெரிவிக்கப் படுகிறது.

## காரைதீவு பிரதேச விளையாட்டு விழா

(முபா)

காரைதீவு பிரதேசப். பிரிவு விளையர்ட்டுப் போட்டி எதிர்வரும் 18ம் திகதி காரைதீவு கனகரெத்தினம் மைதானத்தில் பிரதேச செயலாளர் எஸ்.இராம கிருஷ்ணன் தலைமையில் இடம் பெற ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன.

இப்போட்டியில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.குணசேகரம் சங் கர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

காரைதீவு பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் ஐ.எம்.கதாபி போட்டிக்கான ஒழுங்குகளை செய்துள்ளார்.





மட்/ புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி பி - சுவர்ணராஜ் வலயக்கல்விப் பணிப்பாளர் ரி.பொன்னம்பலம் ஆகியோர் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், வண பிதா மில்லர் வெற்றியீட்டிய மாணவனுக்கு சான்றிதழ் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(வேதாந்தி)

# வாசகர் நெஞ்சம்

## பருவகாலச் சீட்டும் பயணங்களில் அவதியும்!

இ.போ.சபையின் மட்டக்களப்பு சாலையானது பருவகாலச் சீட்டை வழங்குவதற்கு எடுக்கும் அக்கறையை பயணிகளின் பயணத்தினை சீராக்குவதில் காட்டுவதில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கு பருவகாலச் சீட்டை வழங்கும் மட்டக்களப்புச்சாலை மாணவர்களின் பயணத்திற்கு என ஒரு சேவையை ஒழுங்குபடுத்தாததால் பெரிதும் பாதிப்புறு பவர்கள் வாழைச்சேனை வரையிலான காரியங்களில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களும், ஆசிரியர்களுமே.

தினமும் காலையில் ஏறாவூர், வாழைச்சேனை போன்ற இடங்களில் இருந்து மட்டக்களப்பிற்கு வந்து சேரும் உரிய சாலைக்குரிய வண்டிகள் காலை 7.15 ற்கும், 7.30 ற்கும் வாழைச்சேனை நோக்கி திரும்புகின்றன. இவ் வண்டிகளிலேயே பல்கலைக்கழக மாணவர்களும், ஏனைய உத்தியோகத்தர்களும் பயணம் செய்வது வழக்கம். இருந்தும் பல்கலைக்கழக மாணவர்களால் நிரம்பிய படி வரும் வண்டிகளில் ஏனைய உத்தியோகத்தர்கள் ஏற முடியாது போவதனால் உரிய நேரத்திற்கு கடமைக்கு செல்ல முடியாத நிலை ஏற்படுகின்றது.

இதே வேளை மட்டக்களப்பு சாலையினூடாக வழங்கப்படும் பருவகாலச் சீட்டை பயன்படுத்துவோரை வண்டியில் ஏற்ற விரும்பாத ஏனைய சாலைகளின் சாரதிகள் சின்ன ஆஸ்பத்திரி சந்தி, தாண்டவன்வெளி போன்ற இடங்களில் உள்ள தரிப்பிடங்களில் நிறுத்தாமல் செல்வதனால் உரிய தரிப்பிடங்கள் பயணிகளால் நிறைந்திருப்பதை தினமும் காலையில் அவதானிக்கலாம். இவ்வாறு வண்டிகள் நிறுத்தாமல் செல்வதனால் மாணவர்களுடன், தினமும் பணம் செலுத்தி பயணம் செய்யும் உத்தியோகத்தர்களும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

பல்கலைக்கழகத்தில் விரிவுரைகள் சரியாக 8.30 மணிக்கே ஆரம்பிக்கப்படுகின்றது. எனவே அதற்கேற்ப காலை 7.45 மணியளவில் மட்டக்களப்பிலிருந்து கிழக்கு பல்கலைக்கழகம் வரை ஒரு வண்டியை பருவகாலச் சீட்டை வழங்கும் மட்டக்களப்புச்சாலை ஒழுங்குபடுத்துமானால் ஏற்பட்டிருக்கும் போக்குவரத்துப் பிரச்சினையை இலகுவாக தீர்க்கலாம். எனவே இதனை கருத்தில் எடுத்து, மட்டக்களப்புச்சாலை முகாமையாளர் நடவடிக்கை எடுத்து உதவுவாரா?

**எஸ்.ஏம்.தாஸ்**
**மட்டக்களப்பு**

## வீதித் தடைகளை மீண்டும் அமைக்க வேண்டும்

களுவாஞ்சிகுடி, பட்டிருப்பு ஊடாக கல்முனை மட்டக்களப்பு செல்லும் பாதையுடன் எருவில், வைத்தியசாலை வீதி சந்திக்கும் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த வீதித் தடைகள் இனந்தெரியா தவர்களால் அகற்றப்பட்டு விட்டது. இதனால் இந்தச் சந்தியில் பல விபத்துக்கள் ஏற்படுகின்றது. சந்தியினை அடைகின்ற வாகனங்கள் மிக அருகில் வந்த பின்பே உணரக்கூடிய் சூழல் காணப்படுவதால் விபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளுள்ளது. பொதுவாக காலைவேளையிலும், பிறபகலிலும் அதிகமான வாகனங்கள் இதனூடாகச் செல்வதால் விபத்துக்கள் இடம் பெறுகின்றது. போக்குவரத்து அவசரங்களால் ஏற்படும் அபாயத்தை தவிர்க்கும் முகமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் மீண்டும் இவ்விடத்தில் வீதித்தடைகளை உருவாக்கி விபத்துக்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

**எழுவான்**
**களுவாஞ்சிகுடி**

## பஸ் தரிப்பிடங்கள் தேவைதானா?

பஸ் தரிப்பிடங்கள் பற்றி தற்போது தனியார் வாகனங்களோ, இ.போ.சபை பஸ்களோ கவனத்தில் எடுப்பதில்லை. நினைத்த இடத்தில் நிற்பாட்டுவதும்; பிரயாணிகளை ஏற்றுவதும் இறக்குவதும் தற்போது வழமையான நிகழ்ச்சிகளாகி விட்டன. இந்நிலையில் பஸ் தரிப்பிடங்கள் அவசியந்தானா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன. கடந்த காலங்களில் இருந்த நல்ல செயற்பாடுகள் யாவும் புதிய மிலேனியத்தில், புதிய கம்யூட்டர் காலத்தில் தேய்ந்து வருவதன் மர்மம் புரியவில்லை.

**முபா**

## தொலைபேசி இணைப்பு இன்னும் இல்லை!

மண்முனை தென்எருவில் பிரதேச செயலகம் களுவாஞ்சிகுடி பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி, புதிய சொந்த கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. ஒரு மாதம் கடந்து விட்ட நிலையிலும். அதற்கான தொலைபேசி இணைப்பு இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் இங்குள்ள உயர் உத்தியோகத்தர்களும் பொது மக்களும் தங்கள் அலுவல்களை நிறைவேற்றிக் கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். 'ரெலிக்கொம்' நிறுவனத்திற்கு நிலுவையாக உள்ள பெருந்தொகைப் பணம் செலுத்தப்படாததாலேயே இணைப்பு வழங்கப்படவில்லையென பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**வி.கே.ரவீந்திரன்**
**கல்லாறு**

# இசை நடனக் கல்லூரி இணைப்பு! திருமலை பல்கலைக்கழக வளாகம்; இரு பெருந் தடை நீக்கம்!

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு, சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியைக் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்குமாறு ஜனாதிபதி 1999ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் எழுத்து மூலம் பணித்திருந்தார். ஆயினும் இதுவரை காலம் அதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை.**

எனவே தற்போதைய மட்டக்களப்புப் பாராளுமன்றப் பிரதிநிதியும் பிரதி அமைச்சருமான அமைச்சர் கணேசமூர்த்தி ஜனாதிபதியுடனும், உயர்கல்வி அமைச்சருடனும், பேச்சுவார்த்தைகளை நடத்தினர். அதன் விளைவாகச் சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியினைக் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைத்து அக் கல்லூரியில் டிப்ளோமா சான்றிதழ் பெற்ற மாணவர்களுக்குப் பட்டப் படிப்பு பெற வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான பணிப்புரையினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கியுள்ளது.

அதே போன்று அமைச்சர் கணேசமூர்த்தியின் முயற்சியின் பேரில் கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மா.மூக்கையா தலைமையிலான உயர் மட்டக்குழுவொன்று உயர்கல்வி அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்தியது. அதன் விளைவாகத் திருகோணமலை இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியில் நீண்டகால தெளிவற்ற நிலைமைக்கும் தீர்மானங்கள் செய்யப்பட்டுள்ளன.

இப்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, திருகோணமலை இணைந்த பல்கலைக்கழகத்தினை வளாகமாக இணைக்கச் சிபாரிசு செய்துள்ளது. உயர்கல்வி அமைச்சு இது தொடர்பாக அரச வர்த்தமானியில் தனது தீர்மானத்தைப் பிரகடனம் செய்ததன் பின்னர் கிழக்குப் பல்கலைக்கழகம் அதனை தனது வளாகமாக்க பூர்வாங்கப் பணிகளை ஆரம்பிக்கும் என ஸ்ரீ துணைவேந்தர் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாண உயர் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் தடையாக இருந்த இரண்டு பிரச்சினைகள் இப்போது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

# மங்கிக்கட்டில் உணவு முத்திரை பறிப்பும் தில்லுமுல்லுகளும்!

(மட்டக்களப்பு)

வவுணதீவு பிரதேசத்தின் மங்கிக்கட்டு கிராமத்திலுள்ள வறிய மக்கள் ஆறு பேரின் சமுர்த்தி உணவு முத்திரையை அங்கு கடைமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.சி.மங்களேஸ்வரி பறிமுதல் செய்துள்ளதான ஒரு சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி, இவ் உத்தியோகத்தர் தனது சொந்தக் கிராமமான மங்கிக்கட்டில் தனது சொந்த விருப்பத்தின் பேரில் ஆறு பேரின் சமுர்த்தி உணவு முத்திரைகளைத் தடைசெய்துள்ளதாக கிராம அபிவிருத்திச் சங்கம் தினக்கதிருக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தது.

இது தொடர்பாக மாவட்ட உதவி சமுர்த்தி ஆணையாளர் நெடுஞ்செழியனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது "நேற்று முன்தினம் இது விடயமாக நாங்கள் மங்கிக்கட்டுக்கு சென்று இப் பிரச்சினையைத் தீர்த்து விட்டதாகவும் பறிமுதல் செய்யப்பட்ட உணவு முத்திரைகள் அனைத்தும் திரும்பவும் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டு விட்டது" எனவும் கூறினார்.

எனினும் நேற்றுப் பிற்பகல் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ்.சோதி வடிவேல் தொடர்பு கொண்டு இவ்வாறு ஆணையாளர் கூறியபடி எதுவும் நடக்கவில்லை எனவும், மங்கிக்கட்டு வலய முகாமையாளர் சிறிகரனிடம், மங்களேஸ்வரி தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவித்ததாகவும் எனினும் அவர் இவ் விடயங்களை எல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்வோம், எங்களை நீங்கள் எவ்வகையிலும் அசைக்க முடியாது எனக் கூச்சலிட்டதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, உணவு முத்திரை பறிமுதல் செய்யப்பட்ட ஆறு பேரின் உணவு முத்திரைகளில் ஒருவரது உணவு முத்திரை மீளக் கையளிக்கப்பட்டுள்ள தாகவும் சோதிவடிவேல் தெரிவித்தார். அதுகூட திருமதி.மங்களேஸ்வரியின் உறவினர் என்ற படியால் வழங்கப்பட்டது எனவும் இக் கிராம அபிவிருத்திச்சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

# தமிழ் சொற்களஞ்சியம் வெளிவருகிறது

(நமது நிருபர்)

சகல ஊடகத்துறையினரும் சரியான தமிழ் சொற்களைப் பயன்படுத்தக் கூடிய சொற்களஞ்சியம் ஒன்று எதிர்வரும் யூன் மாதம் வெளியிடப்படுகிறது.

முதுநிலைப் பேராசிரியர் கா.சிவத்தம்பியவர்களின் முயற்சியால் உருவாகும் இந்த சொற்களஞ்சியம் மூலம் சகல ஆங்கில சொற்களுக்குமுரிய நேரடித் தமிழ் சொற்களை சகல ஊடகவியலாளர்களும் பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# "நியாப்"

வங்கிப் பொறுப்பதிகாரிகளைச சந்திக்கும் போது எமது சரியான திட்ட முன்வரைவுகள் வழங்கப்பட வேண்டும். எமது திட்டங்கள் தொடர்பாக் உலகவங்கி திருப்தியடையாவிட்டால் உலக வங்கி தனது நிதியை இரத்துச் செய்ய வேண்டி ஏற்படலாம்.

எனவே நாம் மிக வேகமாகவும் திடமாகவும் வேலைவ செய்ய வேண்டும். எமது திட்டங்கள் சமூக மயப்படுத்தப்பட்டு மக்களின் பூரண பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

2001 ஆம் ஆண்டுக்கான நியாப் திட்டத்துக்கு தற்போது 400 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 60 மில்லியன் மட்டக்களப்புக்கு எனப் பயன்படுத்தப்பட முடியும் என நியாப் பிரதித் திட்டப் பணிப்பாளர் ஏ.சி.வினோதராஜா தெரிவித்துள்ளார்.

**அதிகாரிகள் விளக்கம்**

இதேவேளை திட்டத்தில் ஏற்பட்ட தாமதம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அதிகாரிகள் சிலர் விளக்கமளிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டத்

........

தில் அண்மையில் பெய்த கடும் மழை, சூறாவளி என்பன காரணமாக எமது திட்டங்களை நாம் துரிதமாக முன்னெடுக்க முடியவில்லை என்றனர்.

**இராணுவம் தடை!**

மேலும் "நியாப்" திட்டத்தின் பெரும் பகுதி அரச படைக் கட்டுப்பாட்டுக்கு வெளியிலேயே நடைமுறைப்படுத்தப்பட வேண்டியிருப்பதால் அங்கு பொருள்கள், மற்றும் இயந்திரவாதிகளைக் கொண்டு செல்வதற்கு இராணுவ அனுமதி பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இப்போது இராணுவத்தினர் இவ்விடயத்தில் ஒத்துழைப்பு வழங்குவதாக கொள்கையளவில் இணங்கியுள்ளனர் எனத் தெரிவித்தனர்.

**உறுதி**

இறுதியாக மீண்டும் திட்டங்களை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பது தொடர்பில் நிஹால் பெர்னாண்டோ சில ஆலோசனைகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து இனிவரும் காலத்தில் 'நியாப்' திட்டத்தை தாம் துரிதமாகவும் சிறப்பாகவும் முன்னெடுப்போம் என அதிகாரிகள் உறுதியளித்தனர்.

# வன்னியில் .....

நேற்று பகல் வன்னி வான் பரப்பில் நுளைந்த இந்த விமானங்கள் தாக்குதல் நடத்தியதாகவும் மக்கள் அச்சம் காரணமாக பாதுகாப்பு தேடி ஓடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தென்மராட்சியின் கிழக்குப் பிரதேசத்தில் வியாழன் பகல் வந்து வீழ்ந்து வெடித்த குண்டுத் தாக்குதலினால் ஆலயம் ஒன்றும் வீடு ஒன்றும் சேதமாக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

மிகுண்டு வீச்சு விமானங்கள் மற்றும் பீரங்கி பொருத்திய ஹெலிகப்டர்களும் விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது குண்டு தாக்குதல் நடத்திய தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**தினக்கதிர் ஓராண்டு நிறைவையொட்டி**

**தினக்கதிர் ஆதரவுடன்**

**எருவில் இளைஞர் கழகமும்**

**கண்ணகி விளையாட்டுக் கழகமும்**

*இணைந்து நடாத்தும்*

**கலை, கலாசார போட்டியும் நிகழ்வுகளும்**

*போட்டிகள்.*

1. **பாடல்** :
   1. கிராமியப் பாடல்கள்
   2. நம்நாட்டுப் பாடல்கள்
   3. கர்னாடக சங்கீதப் பாடல்கள்
   4. தென்னிந்திய சினிமாப் பாடல்கள்

11. **ஆடல்** :
   1. கூத்து மற்றும் கிராமிய ஆடல்கள்
   2. பரதம்
   3. மேலைத்தேய ஆடல்

111. **நடிப்பு**

1V. **அறிவிப்பாளர்**

*போட்டி நிபந்தனைகள்*

- வயதெல்லை கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- அனைத்தும் தனிநபர் நிகழ்ச்சிகளே
- ஒருவர் ஒன்றிற்கு மேற்பட்ட போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம். (விண்ணப்பங்கள் தனித்தனியே அனுப்பப்பட வேண்டும்)
- போட்டிக்கான நுழைவுக்கட்டணம் 100/=(காசுக்கட்டளை மூலம் அனுப்பலாம்)
- விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி : 30.03.2001

விண்ணப்பங்கள் மற்றும் 100/=க்கான காசுக்கட்டளை அனுப்ப வேண்டிய முகவரி:

**செயலாளர்,**
**இளைஞர் கழகம்,**
**பாடசாலை வீதி,**
**எருவில் - களுவாஞ்சிகுடி**

▲ வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

▲ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

**விண்ணப்பப்படிவம்**

------------ இங்கே வெட்டவும் ✂ ------------

1. முழுப்பெயர் :-..........................
2. முகவரி : ..........................
3. அடையாள அட்டை இல: ..........................
4. கலந்து கொள்ளும் போட்டி: (விபரமாகக் குறிப்பிடவும்) ..........................

போட்டி நிபந்தனைகளை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதுடன் போட்டி சிறப்பாக நடைபெற பூரண ஒத்துழைப்பு வழங்குவேன்.

திகதி:....................

கையொப்பம்

**வீடு தேவை**

மட்டக்களப்பில் நீண்ட காலமாக இயங்கிவரும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றிற்கு கோட்டமுனை, அரசடி, தாண்டவன்வெளி சுற்று வட்டத்துக்குள் நான்கு அறைகளுக்கு குறையாத இடவசதி உள்ள வீடு/கட்டடம் உடனடியாகத் தேவை. கிழமை நாட்களில் தொடர்பு கொள்ள வேண்டிய

**தொலைபேசி இலக்கம் - 24657** Advt.

**இன்று முதல் காண்பிக்கப்படுகிறது**
**மட்டக்களப்பு**
**சாந்தி**
10.30, 2.00, சனி, ஞாயிறு
தினங்களில் மாலை 5.00
*மாதவன், ரீமாசென், அப்பாஸ், விவேக், நாகேஷ் நடித்த*
**மின்னலே...**

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.